பொம்மை



புதுமைப்பித்தன் சிறுகதைப் பரிசு



பரிசு ரூ. 250

*

'பொன்னி' அறிவிக்கும்

முதல் சிறுகதைப் போட்டி

முதற் பரிசு	ரூ.	125
இரண்டாவது பரிசு	ரூ.	75
மூன்றாவது பரிசு	ரூ.	50

தீர்ப்புக் குழுவினர் :

அறிஞர் அப்பாத்துரை
திரு. விந்தன்
,, அகிலன்
,, டி. கே. சீனிவாசன்
,, முருகுசுப்பிரமணியன்

1. *1952 ஜூன் 30*-ம் தேதிக்குள் வரும் சிறுகதைகளே பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.
2. சிறுகதைகள் இதுவரையில் வெளிவராததாகவும் மொழிபெயர்ப்பாகவோ, தழுவலாகவோ இல்லாமல் சொந்தமாய் எழுதியதாகவும் இருக்கவேண்டும். கதைகளை அனுப்பும்போது மேலுறையில் '*சிறுகதைப் போட்டிக்கு*' என்று குறிப்பிடவேண்டும்.
3. மேற்குறிப்பிட்ட ஐந்துபேர்கொண்ட தீர்ப்புக் குழுவினர் பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுப்பார்கள். அவர்களில் பெரும்பாலோருடைய தீர்ப்பே முடிவானது.
4. பரிசுபெறும் சிறுகதைகளைப் 'பொன்னி'யில் வெளியிடும் உரிமை அலுவலகத்திற்கு உண்டு. வெளியிடத்தக்கதெனத் தேர்ந்தெடுக்கப்படும் மற்ற சிறுகதைகளுக்கு ஆசிரியர் கருத்துப்படி அன்பளிப்பு வழங்கப்படும்.
5. போட்டிக்கு அனுப்பப்படும் சிறுகதைகள் 'பொன்னி'யில் 6 பக்கத்திற்குக் குறையாமலும், 16 பக்கத்திற்கு மேற்படாமலும் வரக்கூடியவையாக இருக்கவேண்டும். கதைகளைத் தாளின் ஒரு பக்கம் மட்டும் தெளிவான கையெழுத்தில் எழுதியனுப்ப வேண்டும்.
6. எந்தச் சிறுகதையும் பரிசுபெறத் தக்கதல்ல என்று தீர்ப்புக் குழுவினர் கருதினால், வந்தவற்றுள் சிறந்த கதைகளுக்கு ஆசிரியர் விருப்பப்படி பரிசுகள் அளிக்கப்படும்.
7. இப் போட்டிபற்றி எழும் எல்லா ஐயப்பாடுகளிலும் ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. விதிகளை மாற்றவும் திருத்தவும் அவருக்கு உரிமையுண்டு.
8. இப்போட்டிக்குக் கதைகளை அனுப்புபவர்கள், அக்கதைகளுடன் போதிய அஞ்சல்தலை அனுப்பினால் மட்டுமே கையெழுத்துப் பிரதிகளைத் திருப்பியனுப்ப முடியும்.
9. போட்டிக்கு ஒருவரே ஒன்றுக்கு மேற்பட்ட கதைகள் அனுப்பலாம். ஆனால் யாரும் ஒரு பரிசுக்குமேல் பெறமுடியாது.

பொன்னி

பொருளடக்கம்

மலர் 6 | மே 10, 1952 | இதழ் 7

திருவள்ளுவர் ஆண்டு 1983
சித்திரைத் திங்கள் 28-ம் நாள்

*

பொன்னி சந்தா விவரம்: உள்நாடு இலங்கை ஆண்டு ஒன்றுக்கு ரூ. 6—0—0, ஆறுமாதம் ரூ. 3—0—0. வெளிநாடு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 6-12-0; ஆறுமாதம் ரூ. 3-6-0. இலங்கைக்கு வி.பி.பி. உண்டு.

உங்களுக்குப் பரிசு

குதுப்பினர் வரலாறு காட்டும் சித்திரம். அப்புகைப்படத்தைப் 'பொன்னி'யில் கண்ட மாணவர்கள் பூரித்துப்போய்த் தலைப்புகளை அனுப்பி வைத்திருக்கிறார்கள். தமிழ்ச் சொற்களால் பழமையானாலும் புதுமையானாலும் கச்சிதமாகப் படம் பிடித்துவிட்டோம் என்பதற்கு நமக்கு வந்திருக்கும் தலைப்புகளே சான்று பகருகின்றன. பரிசு பெற்றோரையும் பாராட்டப்பட்டோரையும் வேறொரு பக்கத்தில் காணுங்கள்.

இந்த இதழ் மேலட்டையைப் பாருங்கள். கூடையைத் தலையில் கவிழ்த்துக் கொட்டாவி விடும் பையன் ஒருவன் உங்களை அழைக்கிறான். திரு. பி. செங்கநாதன் தரும் நிழற்படம் இது. குல்லாயைத் தலையில் கவிழ்த்தால் யாரும்பார்த்து அதிசயிக்க போவதில்லை. ஆனால் பழத்தைச் சுமக்கும் கூடையைத் தலையில் சுமந்தால் யார்தான் சிரிக்க மாட்டார்கள்! பெரியவர் இவ்வாறு செய்தால் நாம் 'பைத்தியக்காரத்தனம்' என்று முணுமுணுப்போம். ஆனால் நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் கண்மணிகள் அதே பைத்தியக்காரத்தனத்தைச் செய்யும்போது நாம் கைகொட்டி முறுவலிப்போம்; வானமே நம் வசமாகிவிட்டதுபோல் கும்மாளமிடுவோம்; 'குறும்புக்காரப் பயல்' என்று தலையில் தூக்கி வைத்துக்கொண்டு கூத்தாடுவோம். குழந்தையைப் பெற்ற மகராசர்களுக்கு இந்த இன்பத்தை விளக்கவேண்டியதில்லை. நண்பர்கள் தங்கள் கற்பனைத் தமிழில் தலைப்புகளை வார்க்க நல்ல சந்தர்ப்பம். 20-5-52க்குள் வரும் தலைப்புகளில் சிறந்த தலைப்புக்கு ரூ. 5 பரிசு வழங்கப்படும். உங்களுக்குப் பரிசு காத்திருக்கிறது. தலைப்புகளை உடனே அனுப்புங்கள்.

யாரோ அவள்!

'தமிழழகன்'

கொல்லும் சிரிப்பினைத் தூவிவிட்டுக்—காதல்
கோணத்தில் கண்களை ஏவிவிட்டுச்
செல்லும் சுடர்நிலாப் பெண்ணழகி—என்
சிந்தை முறித்தனள்! யாரோ அவள்?

கன்னம்தனில் குழி ஏற்றிவிட்டு—அதில்தக்
காளிச் சிவப்பினை ஊற்றிவிட்டுப்
பின்னும், பலாச்சுளை செவ்வதரம்—திறந்தும்
பேசாது போயினள்! யாரோ அவள்?

கோணல் வகிடோடும் கொண்டையிட்டு—அக்குழற்
கொண்டையில் மல்லிகைச் செண்டைவைத்து
நாணம் கலந்தனள் போலுமெனைக்—கண்டு
நழுவியே போயினள்! யாரோ அவள்?


சிற்றிடை நோகக் குடமெடுத்து—ஊரார்
சென்றிடும் பாதைத் தடம்விடுத்துச்
சுற்றிலும் தனியாய்ச் சென்றவள்தான்—ஒன்றும்
சொல்லாமல் போயினள்! யாரோ அவள்?

கைம்மல ரால்காவின் மலர் பறித்து—அவள்தம்
கண்மலரால் எனையும் பறித்து
நொய்மையில் சோலைக்குள் நின்றவள்தான்—ஒரு
நொடியில் மறைந்தனள்! யாரோ அவள்?

கையில் துணிஒன்றைப் பின்னிக்கொண்டு—எனது
காதல் குறும்பையும் எண்ணிக்கொண்டுப்
பைய எனைப்பார்த்துப் புன்னகைத்தாள்—சிட்டாய்ப்
பறந்துமே போயினள்! யாரோ அவள்?

நெஞ்சினிற் பாரம் சுமந்துகொண்டு—என்மேல்
நினைப்புமாய் ஆசை குமைந்துகொண்டு
அஞ்சி அஞ்சி மெல்ல வந்தவள்தான்—ஏனோ
அப்புறம் காண்கிலேன்! யாரோ அவள்?

மலர்ச்சேயைக் கையில் எடுத்தபடி—"அதோ
மாமா!" வென்றெனையறி வித்தபடித்
தளிர்க்கரம் நீட்டியே காட்சிதந்தாள்!—அன்றவள்
காதலும் பொய்தானோ? யாரோ அவள்?



ஒரே வழி

இலங்கை இந்தியர் காங்கிரஸ் பதுளையில் கூடி முடிவு செய்தபடி அறப்போராட்டம் தொடங்கப் பெற்றுவிட்டது. இந்தியரின் நியாயமான கோரிக்கைகளை இலங்கை சர்க்கார் கவனிக்கத் தவறி விட்டனர். இந்தியரின் விண்ணப்பங்கள், தூது கோஷ்டிகள், வேண்டுகோள், தீர்மானங்கள் அனைத்தும் பயனற்றுவிட்டன. இந்திய சர்க்காரின் ஆட்சேபக் குறிப்புகளும் குறித்த நன்மையைப் பெற முடியவில்லை. இந்நிலையில் பொதுத் தேர்தல் வந்து விட்டது. இலங்கை சர்க்கார் அவசர அவசரமாகத் தேர்தலை நடத்திவிட முன்வந்தனர். 2½ லட்சம் இந்திய வாக்காளரின் விண்ணப்பங்கள் முடிவு செய்யப்படாமல் சர்க்கார் ஆபீஸ்களில் தூங்குகின்றன. முன் நடந்த தேர்தலில் வாக்குரிமை பெற்றிருந்த இந்தியருக்கும் அந்த உரிமைகள் மறுக்கப்பட்டுவிட்டன. இச்சூழ்நிலையில் இலங்கை இந்தியர் அறப்போர் தொடங்குவதைத் தவிர வேறு வழியில்லை என்று கண்டனர்; தொடங்கியிருக்கின்றனர். அறப்போரில் கலக்கப் பதினாயிரக் கணக்கில் தொண்டர்கள் முன் வருவதும் சிங்களவரும் மற்றோரும் அப்போராட்டத்தில் பங்கு கொள்வதும் போராட்டம் வெற்றி பெறுமென்பதற்குத் தக்க ஆதாரங்களாகும்.

இலங்கை சர்க்கார் போராட்டத்தை அடக்கி ஒடுக்க நினைக்கிறதே ஒழியத் தன் போக்கை மாற்றிக்கொள்ள எண்ணுவதாகத் தெரியவில்லை. அண்மையில் இலங்கைப் பிரதமர் பேசியிருக்கும் செய்திகள் அவ்வளவு உற்சாகமூட்டுவனவாக இல்லை. அவர் இலங்கை வாசிகளுக்கும் இந்தியருக்கும் பகைமை ஊட்டும் முறையில் பேசி வருகிறார். "'அந்தச் சாமி, இந்தச் சாமி' என்று இல்லாமல் உங்களுடைய உண்மையான பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க நான் சந்தர்ப்பமளித்திருக்கிறேன்" என்று அவர் குறிப்பிட்டு வாக்குரிமை இழந்து நிற்கும் இந்தியரின் அவல நிலையைப் பரிகசித்து இருக்கிறார். இந்தியர் சேற்றில் ஒருகால் ஆற்றில் ஒரு கால் என்ற நிலையில் இருக்கிறார்களென்று அவர் குறிப்பிட்டிருப்பது எவ்வகையிலும் பொருந்தாது. இலங்கைப் பிரஜைகளாக வேண்டுமென்று விரும்பி விண்ணப்பித்திருப்போரை எப்படி

மாற்றுக் கருத்துடையவர்கள் என்று கூறமுடியும்? இலங்கை சர்க்கார்தான் அவர்களைப் பிரஜைகளாக்க மறுப்பதன் மூலம் அவர்களை இரண்டுங்கெட்டான் நிலையில் வைத்திருக்கிறது. இத்தகைய அலட்சிய மனப் பான்மை நீடிக்க முடியாது.

தென்னாப்பிரிக்காவில் மலான் இந்தியரைப் படாதபாடு படுத்து கிறார் மலான்; கறுப்பர்கள் என்று ஒதுக்கி வைக்கிறார். ரயி லில் தனிஇடம், பஸ்ஸில் தனி இடம், ஓட்டலில் தனிஇடம் என்று இவ்வாறு பிரிவினை செய்து வருகிறார். அவர்கள் வாழத் தனிப் பிரதேசங்களை ஏற்படுத்தி வருகிறார். இந்தச் சூழல் தென்னாப்பிரிக்காவில் இருப்பதை நாம் புரிந்துகொள்ள முடிகிறது. தென்னாப்பிரிக்கா சர்க்கார் மலான் சர்க்கார். வடித் தெடுத்த வெள்ளையர் ஆட்சி அங்கே நடைபெறுகிறது. அவர் களுக்கு இந்தியர்களைக் கண் டால் வெறுப்பு ஏற்படுவது இயற்கை. ஆனால் நேற்றுவரை இந்தியாவோடு இணைந்திருந்த இலங்கை, இந்தியரை வெறுக் கும்போது நாம் புரிந்துகொள்ள முடியவில்லை. பிரிட்டிஷ் ஆட்சி யில் இந்தியரும் இலங்கைவாசி களும் அடிமைகளாக வாழ்ந்த காலத்தை இலங்கைப் பிரதமர் மறந்திருக்க முடியாது. சுதந் திரம் கிடைத்தது. இரு நாடு களும் விடுதலைபெற்றுத் தனி ஆட்சி நிறுவின. இருநாடுக ளிடையேயும் சகோதர உணர்ச்சி இருப்பதுதானே இயற்கை! அதற்கு மாறாக இந்தியரென் றால் காயும் மனப்பான்மை இலங்கை சர்க்காரிடம் ஒட்டிக் கொண்டது விசித்திரமாகத் தான் இருக்கிறது. இந்தியா அண்டையிலுள்ள பெரிய நாடு. இலங்கை சிறுநாடு. இலங் கைக்கு எப்போதும் இந்தியா வின் அனுதாபமும் ஆதரவும் தேவையென்று கூறவேண்டிய தில்லை. இக்காரணத்தை எண்ணி யாவது இந்தியரின் கோரிக் கையை இலங்கை சர்க்கார் ஏற் றுக்கொண்டிருக்கலாம். அது தான் போகிறது. இந்தியரின் கோரிக்கை நியாயமற்றதாக இருந்தால்தானே மற்ற காரணங் களைத்தேடவேண்டும்? இலங்கை யைத் தாயகமாகக் கொண்டு விட்டவர்கள் பத்து லட்சம் இந்தியர்கள். அவர்கள் தங்கள் குடும்பங்களோடு அங்கே இருக் கிறார்கள். பல குடும்பங்கள் எத்தனையோ தலைமுறைகளாக அங்கே வாழுகின்றன. இலங்கை யின் இன்றைய செல்வம் கொழிக்கும் நிலைக்கு இந்தியத் தொழிலாளர்களே காரணம் என் பதை யாரும் ஒப்புக்கொள்வர். இக்காரணங்களைக் காட்டிக் கேட்கும்போது வாக்குரிமை தரமறுத்தால் இலங்கை சர்க்கார் பாரபட்சமாக நடக்கிறது என்று குற்றஞ்சாட்டுவதைத் தவிர வேறு என்ன முடிவு கட்ட முடியும்!

இலங்கைப் போராட்டம் வெற்றியடைவது உறுதி. மனித சமுதாயத்தின் நியாயமான உரிமைகளை எப்பொழுதும்

யாரும் புறக்கணித்துவிட முடியாது. இலங்கை இந்தியரின் அறப்போர் உலகினரின் கவனத்தை ஈர்த்திருக்கிறது. பக்கத்து நாட்டில் வாழும் தங்கள் சகோதரர்களுக்காக இந்திய நாட்டு மக்கள் கிளர்ந்தெழ வேண்டும். நாடெங்கும் இலங்கை இந்தியர் தினம் கொண்டாடப்படவேண்டும். வெளிநாடுகளிலுள்ள இந்தியர்களும் இலங்கை இந்தியரின் அறப்போருக்கு அனுதாபம் காட்டும் முறையில் கூட்டங்கள் நடத்தி முடிவுகள் செய்யவேண்டும். உலகெங்கும் தூதவர் காரியாலயங்கள் உள்ள இந்திய சர்க்கார் இலங்கை இந்தியர் பிரச்னையை உலகப் பிரச்னையாக ஆக்குவது மிக எளிது. ஆங்காங்குள்ள தூதுவர் காரியாலயங்களில் பத்திரிகை நிருபர்களை அழைத்து இப்பிரச்னைக்கு விளக்கம் தந்தால் எத்தனை பலனிருக்கும்! நேரு ஆசியாவின் ஜோதி என்று அழைக்கப்படுகிறார். இந்தோனேஷ்யாவின் விடுதலையில் அவர் ஆர்வம் காட்டினார். எகிப்து, பாரசீகம் நடத்தும் போராட்டங்களுக்குத் தம் அனுதாபத்தைப் புலப்படுத்தினார். டூனிஸியாவுக்கு ஏற்பட்டுள்ள விடுதலை உணர்வைப் பாராட்டினார். எனவே இலங்கை இந்தியர் கோரிக்கையில் அவர் அனுதாபம் கொள்வது இயற்கை. அவர் முயன்றால் உலகப் பிரச்னையாக இலங்கை இந்தியர் பிரச்னை ஒரு நொடியில் மாறிவிடும். உலகினரின் அனுதாபம் இந்தியர்பால் திரும்பினால் இலங்கை சர்க்கார் அதனை மதிக்காமல் இருக்க முடியாது. ஆகவே இந்திய சர்க்காரின் கவனம் முழு அளவில் இப்பிரச்சினையில் படியும்படி செய்ய வேண்டும். சென்னை சர்க்கார் தான் இலங்கை இந்தியர் பிரச்சினையில் நேரடியான அக்கறை உள்ளவர்கள். அவர்களுடைய பெரும் பொறுப்பு இலங்கை இந்தியரைக் கவனிக்கும்படி இந்திய சர்க்காரை உடனே வற்புறுத்துவதுதான். இலங்கைப் போராட்டம் வெற்றியடைய அதுதான் ஒரே வழி!

இரண்டு காட்சிகள்

தமிழ்த்தும்பி

எத்தனையோ பாலைக்காட்டு வர்ணனைகளைப் படித்திருப்பீர்கள். இப்போது படிக்கப் போவதைப் போன்ற அற்புதமான விவரிப்பைக் கண்டிருப்பது அருமை. உங்கள் எல்லோருக்கும் தெரியும், பாலைவெளியில் கண்ணுக்கெட்டும் தூரம் வரண்ட மணல் இருக்கும் என்று. நீங்கள் எல்லோரும் அறிவீர்கள், அங்கு தாகத்துக்குப் பருக நீரும், வெயிலுக்கு ஒதுங்க நிழலும் கிடையாது என்று. நீர் வரட்சியையும் நிலவெம்மையையும் எப்படி ஒரு பெருங்கவிஞன் விவரிக்கிறான் என்று பார்ப்போம். நம் கற்பனையைப் படித்த பின் கவிஞன் கற்பனையோடு ஒப்பிடலாம், ஒப்பிடுமளவுக்கு நம் கற்பனை உயர்ந்ததாய் இருந்தால்!

★

பாலைக்காடு. பக்கத்திலே பரந்து கிடப்பதை உணராது ஒரு மான் அங்கு வந்துவிட்டது. துள்ளித் திரியும் இயல்பினைக் கொண்ட அது நாலுகால் பாய்ச்சலில் வந்த புதிதில் ஓடுகிறது. பச்சைமர நிழல் விரிந்த காடுகளில் அது பலமணி நேரம் களைக்காது ஓடியிருக்கலாம். அந்த நினைவில் இங்கே துள்ளி ஓடுகிறது. விளைவு, வெகு சிக்கிரத்தில் அது களைப்படைகிறது. வெயிலின் கொடுமை வேறு கொல்லுகிறது! வெயிலில் அலைந்ததால் அதற்கு அடக்கமுடியாத் தாகம் ஏற்படுகிறது. குடிக்கத் தண்ணீர் தேடவும் வானத்தைக் கூரையாகக்கொண்ட அந்த மணல் வெளியில் ஓடித்தானே ஆகவேண்டும்! ஓடுகிறது. சலிக்காது ஓடுகிறது. தண்ணீர் போல அதற்குக் காட்சியளித்த இடத்திலெல்லாம் பக்கத்தில் போய்ப் பார்த்தால் ஒன்றுமில்லை. எல்லாம் ஏமாற்றும் மாயத் தோற்றம்! வெறும் கானல் நீர்! அலுத்துப்போய் அது உட்கார்ந்து விடுகிறது.

எங்கோ மனிதரோடு கூட வந்த ஒரு நாய் தான்தோன்றித்தனமாய்த் தன் போக்கில் ஓடியதால் அதற்கு வழி மறந்து விடுகிறது. அதுவும் மான் நிலையில் கைவிடப்பட்ட உயிர் ராசிபோல அங்குமிங்கும் ஓடுகிறது. அதுவும் மானைப்போல, ஏன் மானைவிட அதிகமாக முயற்சிக்கிறது, தன் உரிமையாளனைத் தேடியடைய. அதன் விடா முயற்சியைப் பாலை வரட்சியும் தாகக் கொடுமையும் தோற்கடிக்கின்றன. நாக்கைத் தொங்கப் போட்டுக்கொண்டு ஓடியதில் அதன் வாயினின்று உமிழ்நீர் வெளிப்படுகிறது. கதிரோன் வெம்மையால் நாக்கு நுனியில் நுரை தொங்கிக்கொண்டு நிலத்

தில் அதனோடு இழுபட்டு மணலையடைகிறது.

சோர்ந்து கிடந்த மான் ஆயாசத்திற்குப் பின் விழித்துப் பார்க்கிறது. அதற்கு நாய் வழி தப்பி அலைந்ததெல்லாம் தெரியாது. சோர்வு நீங்கிய பின் மறுபடி நீரைத்தேட எழுகிறது அது. அதற்கு உடனே நீர் கிடைத்து விடுகிறது. அதற்கே ஆச்சரியமாக இருக்கிறது. தாகம் அடங்குமட்டும் அதற்குத் தண்ணீர் கிடைக்கவில்லை. நாக்கை நனைத்து கணப்பொழுது வாட்சியை மறக்கத் துளி நீர் அதற்கு அகப்படுகிறது. அது என்ன என்று நினைக்கிறீர்கள்? நாய் அங்குமிங்கும் ஓடி உமிழ் நீரையும், நுரையையும் தரையில் சிந்தியதல்லவா? அது வெயிலில் ஆவியாகுமுன் பார்த்துவிட்டதில்தான் மானின் நல்வினையுள்ளது! இன்னும் கொஞ்சம் தாமதித்தால் அது ஆவியாகி விட்டிருக்கும்! பேராசையோடு அந்த நாயின் வாய் நீரை மான் நக்கி விக்கிக்கொள்ளுகிறது. நெருப்புப் பொறியில் நீர் கிடைப்பதாயிருந்தாலும் மான் தீயையே சாப்பிட்டு விட்டிருக்கும்! அவ்வளவு தாகம் அதற்கு.

தீயின் வாயின் நீர் பெறினு முண்பதோர்
சிந்தை கூர வாய் வெந்து வந்து செந்
நாயின் வாயின் நீர் தன்னை நீரென
நவ்வி நாவினால் நக்கி விக்குமே.

[தீயின் வாய்-நெருப்பினிடம்; வாயின் நீர்-உமிழ்நீர்; நவ்வி—மான்]

★

பாலைக்காட்டுக்கு அடுத்து ஒரு ஊர் உள்ளது. அங்கு வெப்பத்தைத் தாங்கும் திறமை படைத்த மக்கள் வசிக்கின்றனர். கொஞ்சம் பசும்புல்லும் இன்னும் சில பச்சைப்பயிர்களும் அங்கு வளருகின்றன. இல்லாவிட்டால்தான் அங்கு மனிதன் வாழமாட்டானே! காலை வேளையில் பசும்புல் நுனியில் பனித்துளி இளம் வெயிலொளியில் பளபளக்கிறது. அவ்வப்போது சிறிது மழையும் அங்கு பெய்கிறது.

வெளியூரான் ஒருவன் அவ்வூருக்கு வந்து தங்கினான். வாணிபம் மேற்கொண்டு வந்தவனாகத் தான் கொள்ளுங்களேன். அவன் ஊருக்கு அடுத்துப் பாலை மணல்



(கடைக்காரனிடம்) "அடடே, எனக்குப் பனியன் தேவையானால் புதுசா ஆர்டர் கொடுக்க வேணுன்னு எனக்கு ரொம்ப நல்லாத் தெரியும். நான் பனியன் கேட்டது இந்த என் பேரப் பயலுக்குத்தான்...இருக்குதா? அல்லது இதுக்கும் ஆர்டர் கொடுக்கத்தான் வேணுமா?..."

விரிந்திருப்பதைக் கேட்டறிந்தவன். அவன் தங்கின நாள் கொஞ்சம் மழை தூறிற்று. அடுத்த நாள் காலையில் மரகதப் புல் நுனியில் பனி தூங்குவதைக் கண்டான். அவனுக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது, இங்கு மழை பெய்வதும், பனித் துளி தங்குவதும். வெளியூரான் உள்ளூரானைக்கேட்டான். "இங்கு மழைகூடப் பெய்யுமா?" என்று. அதற்கு உள்ளூரான் சொன்னான், சாவதானமாக அன்போடு. "இங்கு மழை எப்படி ஐயா பெய்யும்? பக்கத்தில்தான் இத்தனை பெரிய பாலைவனம் இருக்கிறதே? அப்படியிருக்க இங்கு எப்படி மழை பொழியும்? பாலை மிகப்பரந்து கிடக்கிறது. அதைக் கடக்கக் கருமுகிலும் வெண்மதியும் ஓடோடி வரும்.



ஒரு கொசு : (மற்றொன்றிடம்)

இரண்டு பேரில் உனக்கு யாரையடி பிடிக்கிறது?

எத்தனை ஓட்டமாக அவை பறந்தாலும் கண் பார்வைமட்டும் பாலைமணலே காட்சியளிக்கும், அவை இன்னும், இன்னும் வேகமாக ஓடும். கடைசியில் ஒருவாறாக அவை பாலையைக் கடந்து விடும். பாலைக் கடுத்து நம்மூர் இருப்பதால் இங்கு வந்து அவை பெருமூச்செறியும். ஓடினதால் இவற்றின் மீது வியர்வை மணிகள் சொட்டுச் சொட்டாகத் துளிர்த்திருக்கும். நம்மூரில் வியர்வையை அவை இலேசாக உதறும். கருமுகிலின் வியர்வை மழைத் தூறலாகவும், வெண்ணிலவின் வியர்வை பனித்துளியாகவும் உங்களுக்குத் தென்படுகிறது"

வெளியூரான் பிரமித்துவிட்டான். உள்ளபடி இப்படியே இந்த அதிசய ஊரில் அற்புதம் நடக்குமா அல்லது நம் நண்பன் சும்மா கயிறு திரிக்கிறானா என்று அவனால் உறுதியாகக் கொள்ள முடியவில்லை. என்ன இருந்தாலும் சொன்னவன் சாமர்த்தியமாகத்தான் நம்பும்படி சொல்லிவிட்டான் என்பதில் அவனுக்கு இருதிறப்பட்ட அபிப்பிராயமில்லை.

காடிதனைக் கடத்தும் எனக் கருமுகிலும்
வெண்மதியுங் கடக்க அப்பால்
ஓடி இளைத்(து) உடல்வியர்த்த வியர்வன்றே
உகுபுனலும் பனியும். ஐயோ.

★

நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? தாகத்தின் கொடுமையை

யும் நீர் கிடைக்காப் பஞ்சத்தை யும் முதல்பாட்டு எப்படி விவரிக்கிறது? மான் நாயின் வாய் நீரை நக்கி ஆறுதலடைவதில் வறட்சியின் கொடுமை எத்தனை ஆயிரம் மடங்காக வளர்ந்துவிடுகிறது! நீங்களே அக்காட்சியைக் கற்பனை செய்து கொடுமையின் தீவிரத்தைச் சித்தரித்துக்கொள்ள முடிகிறதா? அதற்குமேல் கவிஞர் என்ன செய்வார்? நம்மை எப்படியாவது உணரவைக்கிறார்.

இரண்டாவது பாடலில் பாலை நிலப் பாப்பின் அளவை ஒருவாறு ஊகிக்க உங்களால் முடிகிறதா? மேகமும் நிலவும் ஓட ஓடப் பாலை நீண்டுகொண்டே போகிறதாம். அதோடல்லாது ஓடி ஓடி அவை இளைத்துவிடுகின்றனவாம். அப்போது எவ்வளவு பெரிய பரப்பைப் பாலை தன்னுள் அடக்கிக்கொண்டிருக்கவேண்டும்? நம்மை ஊகிக்கவைக்கக் கவிஞர் என்ன பாடுபடுகிறார்!

இரண்டு காட்சிகளும் வெறும் கற்பனையாகவே இருக்கலாம். சுவையோடு சொல்லவந்த விஷயத்தை அவை விவரிக்கின்றன என்பதில் அபிப்பிராய வேற்றுமை இல்லை. சயங்கொண்டாரின் கலிங்கத்துப்பரணி இப்படி எத்தனையோ காட்சிகளைக் கொண்டுள்ளது!

தலைப்புப் போட்டி

25–4–52 இதழ் மேலட்டை குறித்த போட்டியில் பின்வரும் தலைப்பு ரூ. 5 பரிசு பெறுகிறது.

சரித்திரச் சாலையில் நிறுத்திய மைல்கல்!

பரிசு பெற்றவர்:

சாமுவேல் சங்கரசுப்பு, நிலக்கோட்டை

பாராட்டுக்குரியவை!

வெற்றியால் விளைந்தது; வீரத்தால் உயர்ந்தது!
சு. ரா. அரங்கசாமி, மேட்டுப்பாளையம்

அழியாத தூண்; கரையாத புகழ்!
எஸ். ஆர். முத்துகிருஷ்ணன், தூத்துக்குடி

உள்ளம் வியக்கும்; உலகம் விளக்கும்!
எம். சாமி, நாட்டாரம்பள்ளி

பக்தியின் விளைவல்ல; வெற்றியின் நினைவு!
வே. கோதண்டராமன், திருவண்ணாமலை

வரலாற்று வானிலே வட்டமிடும் பட்டம்!
ஆ. பூபதி, கோபிப்பாளையம், மதுரை

இலக்கியத் தென்றல்!

வளரும் இலக்கியம்

> வாழ்க்கைப் புயல்
> ஆசிரியர் : சுகி
>
> புதுமைப் பிரசுரம்
> பெண்ணாடம்.
>
> விலை ரூ. 1—0—0

ஹார்டி, ஹ்யூகோ போன்ற அயல் நாட்டு ஆசிரியர்கள் கிராமியச் சூழ்நிலையில் படைத்த நாவல்கள்தாமே அவர்களது பெயர்களை இலக்கிய உலகில் நிலைப்படுத்தியுள்ளன! ஆனால் தமிழில் கிராமியப் பின்னணியில் அமைந்த நாவல்கள் ஏனோ விரல்விட்டு எண்ணக்கூடிய அளவில்கூட இன்னும் வெளிவரக்காணோம்!

நண்பர் 'சுகி' எழுதியிருக்கும் வாழ்க்கைப் புயல் கிராமத்துச் சூழ்நிலையை நிலைக்களனாகக் கொண்ட நாவலாகும். வரவேற்கிறோம்!

காதலித்தவர்கள் கணவன்—மனைவியாகக் கூடவில்லை. கனவு இடம் மாறி விழிப்படைந்தது. சந்தர்ப்பங்கள் விளையாடுகின்றன. புயல் ஆரம்பித்தது. உள்ளங்கள் கொந்தளிக்கின்றன. ஆரம்பித்த புயல் அடங்கவே இல்லை. சந்தனம்-கண்ணம்மா கிருஷ்ணன் இவர்களைப் பேட்டி காணுங்கள். புதிரல்ல; அது அவர்களது வாழ்க்கையின் புதிர்—புயல்!

வாழ்க்கைப் புயல் ஆசிரியர்: 'சுகி'யின் வெற்றி முத்திரை—கிராம அமைப்பில் தென்றல் நடையில் சுவைதரும் சம்பவங்களுடன் சிரிக்கவைக்கும் பேச்சுக்களையும் இணைத்து எழுதியிருக்கின்ற காரணத்தால்!

வாழ்க்கைப் புயல் பதிப்பகத்தாரின் போற்றத்தக்க முயற்சி—சிறந்த எழுத்தாளரது சிறந்த எழுத்தைத் தேர்ந்தெடுத்து அழகிய பதிப்பாகக் கொணர்ந்திருக்கும் காரணத்தால்!

> தொடுவானம்
> ஆசிரியர் : வாணிதாசன்
>
> திராவிடன் பதிப்பகம்
> வேலூர்.
>
> விலை ரூ. 0—12—0

கவியரசர் பாரதிதாசன் வழி தோன்றிய மாணவர்களுக்குள் தலைசிறந்த கவிஞர் தோழர் வாணிதாசன். புரட்சிக்கனல் சுடர் தெறிக்கும் அவரது இசைப் பாடல்களின் இணைப்பே தொடுவானம் என்ற நூல்.

காலம் மாறிவிட்டது; கருத்து மாற

வேண்டாமா? அதற்குப் புரட்சி தாவிப் புனையப்பெறும் இம் மாதிரிக் கவிதைகளல்லவா மிக அவசியம்.

வடக்கில் இமயமலை—உனக்கு
வணங்கிப் பணிந்ததுண்டோ?
அடக்கிப் பிறநாட்டார்—உன்னை
ஆளப் பொறுப்பாயோ?

நிலவைப்பற்றி எவ்வளவு எளிய நடையில் அழகாகப் பாடுகிறார், கவனியுங்கள்!

பாலை நிறைத்து வைத்தாய்
பரந்த கடல் வெளியில்
பசு வெள்ளிப் பாய் விரித்துப்
பருக அழைக்கின்றாயோ?

'கவிஞர் வாணிதாசன் இன்னிசைச் செல்வம் தொடுவானம். சொற்கட்டும் சந்தச் சிறப்பும் பொலிந்து விளங்கும் இசை ஊற்று தொடுவானம்' என்று கூறுகிறது பதிப்புரை. ஆமாம்; முற்றும் உண்மை!

—பூவை

ஒரே ஆசை
ஆசிரியர்: கடலூர் புரட்சிதாசன்
புரட்சிப் புத்தகப்பண்ணை,
சென்னை—21.
விலை ரூ. 1-0-0

'ஒரே ஆசை!' என்ற அழகான தலைப்புடன் கூடிய ஒரு நாடக நூல் இது. முப்பது காட்சிகளை நூறு பக்கங்களில் ஆட்டிவைத்திருக்கிறார் தோழர் புரட்சிதாசன். ஆரம்பமாகும் ஐந்தாறு ஏடுகளிலேயே, ஆசிரியருடைய ஆசை, வெளியீட்டாளர்களின் 'ஆசை' முதலிய வரிகள் அலைமாதிரி புரண்டு வந்து நம்மை நனைத்துச் செல்லுகின்றன.

கதை—ஒருமடம், மடாதிபதி, அவனால் கற்பழிக்கப்பட்ட கன்னி, வக்கீல், பி-ஏ யும், இண்டரும் படித்த பிச்சைக்காரர்கள், நாகரிகயுவதி, நாட்டுக்கட்டை 'சோடி' ஒன்று—இத்தியாதிகளுடன் ரெயில்வே கற்றாழைச் செடி மாதிரி நிற்கிறது. ஆசிரியர் இதை எழுதும்போது 'வேலைக்காரி' என்ற சினிமாப் படத்தின் கதையை மனதிற் கொள்ளாமல் எழுதியிருந்தாரென்றால், புதுமையான எண்ணங்கள் எழும்பி இருக்கும். என்னவோ, 'கன்னாபின்னா' என்று காட்சிகளைக் கோர்வையாக்கித் தன்னுடைய 'கதை—வசன' ஆசையை ஓடவிட்டிருக்கிறார். உரையாடல்களை அவசரப்படாமல் நிதானத்துடன் நிறுத்தி எழுதியிருக்கலாம். நாடகத்தின் வார்ப்பு சிற்சில இடங்களில் தட்டாமாலை சுற்றுகிறது. காதல் கட்டங்களின் கண்ணாமூச்சியை மறந்து விட நினைத்தாலும், படித்துப் பட்டம்பெற்ற திருடர்களின் அம்பு போடும் முறை நம்மை மூச்சுத் திணற அடிக்கின்றது! எங்கேயாவது ஒரு மூலையில் உட்கார்ந்து பொழுதுபோக்குவதற்காக இந்த நாடகத்தைப் படிக்கலாம். நடிக்க முயலுகிறவர்கள் மிகவும் தைரியசாலிகளாக இருக்கவேண்டும்.

நாடகமே உலகம்! நாளை நடப்பதை அறிய யாரால் முடியும்? மேலும் இவ்வாசிரியர் நாடகம் எழுதுவதை விடுத்துக் கதைக்கும் நாடகத்திற்கும் உள்ள வேறுபாடுகளை அலசி ஆராய்வது மிகவும் அவசியம். 'கதை, எப்படியும் புத்தகமாக வெளிவர வேண்டும்' என்பது ஆசிரியருடைய ஒரே ஆசை! அவர், இத்துறையில் ஆழந்தெரியாமல் காலை விடக்கூடாது என்பது என்னுடைய ஒரே ஆசை!

'இது ஒரு இனிய காதல் நாவல்' என்று பதிப்புரையில் அச்சாகி இருக்கிறது.

ஒரே மலர். அதைச் சுற்றி மூன்று வண்டுகள். இந்தச் சிறு ஐந்துக்களின் ரீங்காரமே, இனிய இக்காதல் நாவலில் உள்ள கதை. இதை எழுதியவர், பழங்கால இலக்கியங்களுடன் சரசம்ஆடியவர்போலத்தோற்றுகிறது. அதனால் அந்த வாடை சிற்சில இடங்களில் சாடையாக வீசுகிறது. அது எங்ஙனமெனில் புனைகதைக்கு வேண்டிய கட்டுக்கோப்பும், கற்பனைவளமும், அன்னுரிடம் இன்னும் முறைப்படி போய் மோதவில்லை. கதையிலுள்ள வேகத்தையும், விறுவிறுப்பையும் மிகமிக மந்தப் படுத்திவிடுகிறது தமிழ் நடை. 'புத்தக உருவில் முதல் முயற்சி' என்று அவரே நமக்குக் கூறி விட்டதால் அனுதாபப்பட வேண்டியது அவசியம்தான். எழுத்துலகத்தில் இன்னும் பல காலம் பழகிய பின்பு நெடுங் கதைகள் எழுத முயலவேண்டும். சிறுகதைகளை எழுதி எழுதிப் பண்பட்டு விட்டாரென்றால் எதிர்காலம் நன்றாக இருப்பதோடு, அன்பு, ஆசை, காதல், காமம், முதலியவைகளுக்குள்ள வேற்றுமைகளையும் சரிவரப் புரிந்துகொள்ளமுடியும். இந் நூலில் நாவல் என்று கூறுவதற்குரிய முழு அம்சங்களும் சரிவரப் பொருந்தவில்லை. ஏதோ படிக்கலாம், பொழுதை ஓட்ட!

—வேதாளம்

<u>வரப்பெற்றோம் :</u>

வாழ்க்கை: (மாத வெளியீடு) ஆசிரியர்: சித்தார்த்தன். திருப்பாதிரிப்புலியூர். விலை 0–8–0. எழுத்துலகிற்கு நன்கு பரிச்சயமான ஆசிரியர்களின் தேன் சொட்டும் கதை கட்டுரைகளுடன் அழகாகத் திகழ்கிறது இவ்வெளியீடு. வரவேற்கிறோம்! வெற்றிபெற வாழ்த்துகிறோம்!

பொழுதுபோக்கு

பாலா

ராணி

ஜூபிடர்காரர்கள் அண்மையில் திரையிட்டிருக்கும் படமான ராணி கதைபற்றிய குறிப்பு எதுவுமின்றியே ஓட ஆரம்பித்து விடுகிறது. 'லவ் ஆப் கார்மன்' என்ற ஆங்கிலப் படத்தின் அடித்தளத்தில் எழும்பியிருக்கிறது இப்படத்தின் கதை. ஆனால் கதையைப் பொறுத்த மட்டில் போற்றக்கூடிய புது அம்சம் எதுவுமில்லை.

மன்னன் மகள் நாடோடித் தலைவனால் களவாடப்படுகிறாள். பருவமும் வயதும் அவளை அழகுப் பாவையாக மாற்றிவிடுகிறது. அவள் ராணி! காதல் பிறக்கிறது ராணிக்கும் சிப்பாய் விஜயனுக்கும். காதல் போட்டி சிப்பாய்க்கும் நாடோடித் தலைவனுக்கும்! காரணம் தலைவனின் கண் ராணிமீது! வஞ்சமும் வாள்வீச்சும் போட்டியிடுகின்றன. 'ஒருநாள் ராணி'யாகும் ராணி படத்தைச் சுபமாக முடித்துவைக்கத் தர்பாரில் ஒரிஜினல் ராணியாகிக் காலித்தவனின் காம்பற்றுகிறாள்!

ஒரு படம் வெற்றிகரமாக ஓடுகிறதென்றால் அதற்குரிய பங்கில் கதைக்கும் முக்கிய இடம் உண்டு; அதை விட முழுக் காரணமாக அமைவது அதில் பங்கேற்று நடித்துள்ள நடிக, நடிகையர்களின் வெற்றியே ஆகும். படத்தின் கதைப் போக்கு சாதாரணமாக இருந்தும்கூட, ராணி 'பாக்ஸ் ஆபீஸ் ஹிட்' அளவுக்கு வெற்றி என்ற நிலை ஏற்பட்டால், ராணியின் பாகம் தாங்கியிருக்கும் பானுமதி தான் அதற்கு உயிர்!

'ராணி படத்தில் நான் நடித்திருக்கும் ஒவ்வொரு கட்டமும் எனக்குப் பிடித்திருக்கிறது என்று சொல்வேன்' என்கிறார் பானுமதி. அவரது இந்தக் கருத்தை ஒப்பிட்டுப் பார்க்க ராணியில் பானுமதி நாடோடிப் பெண்ணாகத் தோன்றிக் களங்கமற்ற உள்ளத்துடன், குறும்புப் பார்வையுடன், குதூகலப் புன்னகையுடன் ஆடிப் பாடிப் பேசும் கட்டங்கள் சாட்சியாக அமைகின்றன; இயற்கையாக,

அனுயாசமாக, தன் இஷ்டம் போல் நடித்திருக்கிறார்! ரசிகர்களுக்குத்தன்னைப்பற்றியுள்ள நல்லெண்ணத்தை வளர்த்து நிலைப்படுத்திக்கொண்டுவிடுகிறார் பானுமதி இப்படத்தின் மூலம்.

கதாநாயகனாகத் தோன்றும் பாலசந்தர் பானுமதியின் காதலனாக—படத்தின் கதாநாயகனாக நடிக்க முயன்றிருக்கிறார் என்றுதான் சொல்லவேண்டும். 'கைதி'யில் நடித்த அளவுக்குக்கூட அவர் 'ராணி'யில் நடிக்கவில்லை.

வழக்கமாக இடம் பெறும் கத்திச் சண்டைகளுக்கும் ராணியில் பஞ்சமில்லை. இம்மாதிரிக் கட்டங்களின் அலுப்பைத் தீர்த்துவைக்க நல்ல வேலையாகத் தேர்ந்தெடுத்த இரண்டு மூன்று நடனங்களை அடுத்தடுத்து அபூர்வமாக ஆடியிருக்கிறாள் ராணி! நாடோடித் தலைவனாக வரும் வஹாப் காஷ்மீரியின் நடிப்பு வில்லன் பகுதியளவில் வெற்றியடைகிறது. முஸ்தாபா, சின், லக்ஷ்மிபிரபா—இவர்களின் நடிப்பில் குறையில்லை. தளபதி கர்ணசிங்கை ஒரு ஜோசியப் பைத்தியமாகக் காட்டி, அதற்கெனச் சில நூறு அடி பிலிம் சுருளை வீணடித்திருப்பதுதான் பெருங்குறை வருந்தத் தக்கது! வசனம், பாடல்கள் சுவைக்கத்தக்கவை.

பிரசாத் டைரக்ஷனில் தயாரான ராணி மொத்தத்தில் பார்த்து ரசிக்கத்தக்க வகையில் ஜனரஞ்சகமாக அமைந்திருக்கிறது. ஜூபிடருக்கு ராணி நல்ல வெற்றியையும், நல்ல வருவாயும் அளிக்குமென்றே நினைக்கிறேன்.

ஒரு கதையின் முடிவை ஆரம்பமாகக் கொண்டு மற்றொரு கதை தொடங்கப்பெறும் 'அந்தாதிக் கதை' வரிசையில் நண்பர்கள் புதுமைச்சித்தன், வீர. பழனியப்பன் இருவரும் கலந்துகொண்டிருக்கின்றனர். இப் பகுதி தொடர்ந்து இடம்பெறும்.

யாரோ!

புதுமைச்சித்தன்

பலவிதமாகச் சிந்தித்துக் கொண்டிருந்த கோபால் ஒரு முடிவிற்கும் வரமுடியாமல் மிகவும் குழப்பமடைந்திருந்தான்.

ஐநூறு ரூபாய்!

ஏககாலத்தில் இவ்வளவு பெரிய தொகையை எப்படிச் சம்பாதிப்பது? தன் நிலையை அவன் நன்றாக உணர்ந்திருந்தான். ஒரு சாதாரண பஞ்சாலைத் தொழிலாளியால் ஒரே சமயத்தில் மொத்தமாக இந்தத் தொகையைச் சம்பாதிக்க முடியாதென்பது அவனுக்குத் தெரியும். ஆனால்...!

அவளுக்காக அவன் எதையும் செய்யத் தயாராயிருந்தான். அவள் தானே அவன் வாழ்க்கையின் இலட்சியம்! அவளுக்காக எப்படியும் ஐநூறு ரூபாய் சம்பாதித்துவிடவேண்டும் என்ற எண்ணம்தான் மேலோங்கி நின்றதே தவிர, அவ்வளவு பெரிய தொகையை எப்படிச் சம்பாதிப்பது என்பதுதான் புரியவில்லை! அவன் சிந்தனை தடம் புரண்டு கடந்து போன நிகழ்ச்சிகளைத் தொட்டு நின்றது.

★

அன்றொருநாள்! ஆலைச்சங்கு காதைத் துளைக்கும் பேரொலியுடன் அலறி ஓய்ந்தது. வேலை முடிந்து தொழிலாளர்கள் யாவரும் ஆலையிலிருந்து திரும்பிக் கொண்டிருந்தனர். வீதியை அடைத்தவண்ணம் நடந்து கொண்டிருந்த மனிதக் கூட்டத்தில் ஒருவனாய் வெகு வேகமாக நடந்துகொண்டிருந்தான் கோபால். அவனும் வேலை முடிந்து ஆலையிலிருந்துதான் வந்துகொண்டிருந்தான். ஏதோ நினைவில் ஒன்றியவனாய் நடை போட்டுக்கொண்டிருந்த அவன் மேல் எதிரில் வந்துகொண்டிருந்த யாரோ மோதிக் கொண்டார்கள். 'டக்'கென்று நின்றான் கோபால், 'பிரேக்' போடப்பட்ட இயந்திரம் மாதிரி. அவன் கோபம் எல்லை கடந்தது. நின்று பார்த்தான். அவன் மேல் மோதிக்கொண்டது ஒரு பெண்!

"கண் தெரியவில்லை?" — கோபத்தில் நடுத்தெரு என்

பதையும் மறந்து கத்தினன் கோபால்.

"ஐயா, கோபித்துக் கொள்ளாதீர்கள். உண்மையாகவே எனக்குக் கண் தெரியாது. தெரிந்தால்..."

கோபம் ஆச்சரியமாக மாறியது. அந்தப் பெண்ணைக் கூர்ந்து கவனித்தான்.

கண்கள் இருக்கின்றன. கண்களைக் காக்கும் இமைகளும் இருக்கின்றன. என்ருலும், அவள் கண்களில் பார்வையில்லை.

அவளுக்கு பதினறு வயதிற்கு மேல் இருக்காது. எவர் மனத்தையும் கவரும் நல்ல அழகு. எல்லாமிருந்தும் கண்களில் பார்வை கிடையாது. அவள்—பூரண உருவமும் வரையப்பட்டுக் கண் திறக்கப்படாத ஓவியம்!

அவன் எங்கு செல்லவேண்டுமெனக் கேட்டு, அவள் கையைப் பிடித்துக்கொண்டு வழிகாட்டியாக முன்னே நடந்தான் கோபால். வழியில் அவளைப் பற்றிய விபரங்களைக் கேட்டுக்கொண்டான்.


அவள் பெயர் கல்யாணி. வயோதிகத்தை எட்டிப்பிடித்துவிட்ட தாத்தாவைத் தவிர, அவளுக்கு வேறு யாரும் கிடையாது. அந்தக் கிழவன் பழத்தோட்டங்களுக்குச்சென்று, மொத்தமாகப் பழங்களை வாங்கித் தெருவோரங்களில் வைத்துச் சில்லரையில் விற்பது வழக்கம். அதில் கிடைக்கும் வருவாயைக் கொண்டுதான், அந்த இரு உயிர்களும் வயிற்றைக் கழுவிவந்தன. பழுத்த கிழவனுல், குருட்டுப் பெண்ணுல் வேறு என்ன செய்யமுடியும்?

★

நாட்கள் சென்றன!

கல்யாணி, அவள் தாத்தா—இந்த இருவரின் சுக துக்கங்களில் பங்குகொள்ளும் அளவிற்கு, அவர்கள் குடும்பத்தில் ஒருவனுக ஆகிவிட்டான் கோபால். ஆலைக்குச் செல்லும் நேரம் தவிர, மற்ற நேரங்களிலெல்லாம் அவர்களுடன்தான் வாசம்!

அவனுக்குக் கல்யாணியைச் சந்தித்ததிலிருந்து ஒரு எண்ணம். கல்யாணி பிறவிக் குருடியல்ல! இடையில் கண்ணில் ஏற்பட்ட கோளாறுதான். கண் டாக்டர் எவரிடமாவது காட்டிப் பார்த்தால்...? நெடுநாட்களாக அவன் மனதில் முளைவிட்டிருந்த இந்த எண்ணம் பலமாக வேரூன்றியது.



ஒருநாள், பிரபலகண் டாக்டர் ...ாசுவிடம் அவளை அழைத்துச் சென்றான் கோபால். அவள் கண்களைப் பரிசோதிக்குமாறு கேட்டுக்கொண்டான்.

டாக்டர் அவள் கண்களைப் பரிசோதித்துப் பார்த்தார்.

"கண்களில் ஒருவித மெல்லிய ...தால் வளர்ந்திருக்கிறது. அதை ஆபரேஷன் செய்து நீக்கி விட்டால், இழந்த பார்வை ...ண்டுவிடும்" என்றார் டாக்டர் ...ாசு.

டாக்டரின் சொற்கள், அவன் ...ணதிற்கு வாடிய பயிருக்கு வார்க்கப்பட்ட நீரைப்போல் குளிர்ச்சியைத் தந்தன.

"எவ்வளவு கேட்கிறீர்கள், டாக்டர்?"

"ஐநூறு ரூபாய்!......ஆபரேஷன் முடிந்து குணம் கண்ட பிறகு தாலாம்..."

"கூடிய விரைவில் பணத்துடன் வருகிறேன், டாக்டர்"—அவளுடன் அங்கிருந்து நடந்த கோபால், எப்படியும் அவளுக்கு ஆபரேஷன் செய்வித்துவிடுவதென்று உறுதிகொண்டான்.



சிந்தனை தடைப்பட்டது.

ஐநூறு ரூபாய்!

யாரிடமாவது கடன் கேட்டுப் பார்க்கலாமென்று நம்பினான். தன்னை நம்பி இந்தப் பெரிய தொகையை யார் கடன் கொடுக்கப்போகிறார்கள் என்ற அவநம்பிக்கை, கடன் கேட்டுப் பார்க்கலாம் என்ற நம்பிக்கையைக் கொன்றுவிட்டது.

"அதுதான் சரி; நடப்பது நடக்கட்டும். கல்யாணி மீண்டும் பார்வை பெற்றால் அதுவே போதும்"—ஒரு முடிவிற்கு வந்த கோபால் படுக்கைக்குச் சென்றான்.

★

மறுநாள் கல்யாணியை அழைத்துக்கொண்டு டாக்டர் வாசுவிடம் சென்றான் கோபால். சிகரெட்டைப் புகைத்த வண்ணம் பத்திரிகை படித்துக் கொண்டிருந்த டாக்டர், இருவரின் வருகையைக் கண்டதும் படிப்பதை நிறுத்திவிட்டு நிமிர்ந்தார்.

"டாக்டர்...?"

"என்ன கோபால்?..."

"ஒரு விஷயம்!..."

"என்ன?..."

"ஆபரேஷனுக்காக நீங்கள் கேட்ட பணத்தைத் தருகிறேன். ஆனால் பணம் கைக்கு வரவில்லை. இன்னும் ஒரிரு மணி நேரத்தில் வந்துவிடும். அதுவரை கல்யாணி இங்கேயே தங்கள் ஆதரவில் இருக்கட்டும்..."

"தாராளமாக!"

முகிலால் மூடப்பட்டிருக்கும் முழு நிலவு மாதிரி தன்னருகே நிற்கும் கல்யாணியைப் பார்த்தான்.

"கல்யாணி கொஞ்ச நேரம் இங்கேயே இரு... இதோ வந்து விடுகிறேன்" என்று வெளியில் சென்றான் கோபால்.

★

அன்று நள்ளிரவு!

டக்—டக்—என்று கதவு தட்டப்படும் சப்தம் கேட்டு எழுந்தார் டாக்டர் வாசு.

"யாரது?..."

"நான்தான் கோபால்..." குரலில் பரபரப்பு காணப்பட்டது.

"என்ன கோபால்... இந்த நேரத்தில்?..." கதவைத் திறந்தார் டாக்டர்.

அவன் வியர்வை சொட்டச் சொட்டப் பெருமூச்சுடன் பீதியும் கலவரமும் கவிந்த முகத்துடன் நின்றுகொண்டிருந்தான். அடிக்கொருதரம் தெருக் கோடியைத் திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தான்.

'இதோ வருகிறேன்' என்று கல்யாணியை விட்டுவிட்டுக் காலையில் சென்றவன், இப்பொழுது நடுநிசியில் வந்திருக்கிறான்.

"என்ன கோபால்?"

"இந்தாருங்கள், டாக்டர்... நீங்கள் கேட்ட பணம்... இனி நான் வந்தாலும் வராவிட்டாலும் கல்யாணிக்கு ஆபரேஷன் செய்துவிடுங்கள்..."

"ஏன்? இனி நீ வர மாட்டாயா?

"வருவேன். வேலைத் தொந்திரவு நினைத்த பொழுது வர இடங்கொடுக்காது"

"வாயிற்படியிலேயே நின்று கொண்டிருக்கிறாயே!... உள்ளே வா, கோபால்"

"பரவாயில்லை, டாக்டர். கல்யாணி நன்றாய் இருக்கிறாளா?"

"இருக்கிறாள்"

"நான் சொன்னது ஞாபகமிருக்கட்டும், டாக்டர்...நான் வருகிறேன்..." டாக்டரின் பதிலையும் எதிர்பாராமல் வாயிற்படியிலிருந்து இறங்கி 'விர்' ரென்று தெருவில் நடந்தான் கோபால். அவன் விசித்திரச் செயலைப் புரிந்துகொள்ள முடியாத டாக்டர், 'கான்ஸி' நோட்டுக்களைப் பெற்றுக் கொண்டு உள்ளே போய்க் கதவை மூடித் தாளிட்டார்.

தெருக் கோடியில் நாலைந்து பேர், 'டார்ச்' விளக்குடன் யாரையோ தேடியவண்ணம் வந்துகொண்டிருந்தனர்.

★

கல்யாணியின் கண் ஆபரேஷன் முடிந்தது. டாக்டர் வாசுவிற்கு அதில் பூரண வெற்றி!

டாக்டர் வாசுவினால் கல்யாணி பிரத்தியேகமாகக் கவனிக்கப்பட்டாள். பத்து நாட்களுக்குப் பிறகு கண்களில் போடப்பட்டிருக்கும் கட்டு அவிழ்க்கப்படும். அடிக்கொருதாம் டாக்டர் வந்து பார்த்துச் சென்றவண்ணமிருந்தார். அவளுக்கு உதவியாக இருக்கப் பக்கத்தில் எப்பொழுதும் ஒரு நர்ஸ் அமர்த்தப்பட்டிருந்தாள்.

'வந்தாலும் வருவேன்; வரா விட்டாலும் இல்லை' என்று அன்று நள்ளிரவு சொல்லி விட்டுப் போன கோபால் அதற்குப்பின் வரவே இல்லை. அவன் வாராததைப்பற்றி நிமிடத்திற்கொருதாம் கல்யாணி டாக்டரைக் கேட்டவாறு இருந்தாள். பாவம்! குரலைத் தவிர அவன் உருவத்தைப்பார்த்திருக்காத அந்தக் குருட்டுப் பெண்ணால் வேறு என்ன செய்ய முடியும்? டாக்டர் தான் என்ன செய்யமுடியும்? தொழில் செய்வதற்கே நேரம் போதாமல் இருக்கும்போது அவனைத் தேடிக்கொண்டு திரிய நேரமேது?

★

கம்பியைப் பிடித்தபடி சிறையில் இருந்த கோபாலனின் நினைவு வட்டத்திற்குள் கல்யாணி மிதந்துகொண்டிருந்தாள்.

'இத்தனை நாள் நான் அவளைச் சந்திக்காததால் அவள் எவ்வளவு வேதனைப் படுகிறாளோ? நான் அவளருகில் இருந்தால் அவளுக்கு ஒரு ஆறுதல்! இப்பொழுது அவளுக்கு ஆறுதல் அளிக்க யார் இருக்கிறார்கள்?...'

அவன் மனம் மிகவும் வேதனைப்பட்டது. வேதனைப் பட்டு என்ன செய்ய, மனித இதயத்தின் வேதனைத் துடிப்பையறியமுடியாத கற்சுவர்களுக்



கும் இரும்புக்கம்பிக் கதவிற்கும் நடுவில் இருக்கும்போது?

'கல்யாணிக்கு ஆபரேஷன் நடந்திருக்குமா? அல்லது பணத்தைப் பெற்றுக்கொண்ட டாக்டர், அவளைக் கவனிக்காமல் கை விட்டிருப்பாரா... இருக்காது! அவர் நல்ல மனிதர்...... கல்யாணி—அவள் கண்கள் குணமடைந்து உலக இன்பங்களில் பங்கு கொள்வதை நேரில் இருந்து பார்ப்பதற்கில்லாமல் அந்தகாரச் சிறையில் அடைபட்டுக் கிடக்கவேண்டியிருக்கிறது! போகட்டும். நான் எவ்வளவு துன்பம் அனுபவித்தாலும் அவள் சுகமாயிருந்தால் அதுவே போதும். ஐநூறு ரூபாய் பணம் எங்கும் கிடைக்காமல் அவளுக்காகத் தானே திருடினேன். சிறைத் தண்டனையை ஏற்றுக் கொண்டேன். இரண்டு வருடம்! இந்த இரண்டு வருடங்கள் எப்படிக் கழியப்போகின்றவோ! ஒரு நாள் கழிவது ஒரு வருடமாய் இருக்கிறது. இந்த ஒரு வருட தண்டனைக்காலம் எனக்கும் கல்யாணிக்கும் இடையில் பிரிவென்னும் பெரும் அகழியைத் தோண்டி விட்டது. அவள் வாழ்வில் இனி என்னென்ன மாறுதல்கள் குறுக்கிடப் போகின்றனவோ?'

துயர் நிறைந்த அவன் உள்ளம் ஏதேதோ எண்ணங்களால் துவண்டது.

★

'அவன் வருவான், வருவான்' என்று கல்யாணி கொண்டிருந்த நம்பிக்கை தளர ஆரம்பித்தது. இழந்த பார்வையைத் திரும்பப் பெற்ற அவள்—குரலைத் தவிர அவனைப் பார்த்திராத அவள், அவனைப் பார்க்கவேண்டுமென்று எவ்வளவு ஆசைப் பட்டாள்! அவன் வரவே இல்லை! ஆசை நிராசையாகியது.

தாய் தந்தையற்ற அவளுக்கு இத்தனை காலமும் ஆதரவாய் இருந்த தாத்தா எதிர்பாராவிதமாகக் கார் விபத்தில் மாண்டு போனார். சுமக்க முடியாத சோகத்தை இதயம் சுமக்க நேர்ந்தது. வாழ்க்கையை எந்தக் கோணத்தில் நின்று பார்த்தாலும் இனிப்பதாய் இல்லை. வருபவனாய் இருந்தால் இத்தனை நாளும் வந்திருக்க மாட்டானா?

டாக்டர் வாசுவின் மனதில் ஒரு கனவு பல நாட்களாகச்

சுழல் வட்டமிட்டுக்கொண்டிருந்தது.

'கல்யாணியை நாம் மணந்து கொண்டால் என்ன? அவளென்ன அழகாய் இல்லையா? முல்லை மலர் பூஞ்சோலையில் பூத்திருந்தால்தான் அழகும் மணமும் பெற்று விளங்குமா? குப்பைமேட்டில் பூத்திருந்தால்? எங்கிருந்தாலும் அதற்குள்ள மதிப்புக் குன்றிவிடாதே! அவள் முடிவையும் கேட்டுவிட வேண்டும். தன் நிலையைத் தெளிவாக உணர்ந்திருக்கும் அவள் மறுக்கமாட்டாள்'—நம்பிக்கையுடன் கல்யாணியின் இருப்பிடம் நோக்கிச் சென்றார் டாக்டர் வாசு.

மாலைநேரம். அந்திச் சூரியன் நகரத்தின் உயரமான கட்டடங்கள்மீதெல்லாம் பொன்முலாம் பூசிக்கொண்டிருந்தான். பலவித ஆடையலங்காரத்துடன் திரியும் மனிதக்கூட்டத்தால் கலகலப்பாகத் திகழ்ந்தது அந்தப்பூங்கா. நடுவிலிருந்த ஒலிபெருக்கியிலிருந்து ஏதோ ஒரு கீதம் அலறல் மயமாக வெளிப்பட்டுக்கொண்டிருந்தது. பூங்காவின் பாதையில் குறுக்கும் நெடுக்குமாகக் கணக்கற்ற 'பிளஷ்'ர்கள் விரைந்துகொண்டிருந்தன.

பாதையின் ஓரத்தில் ஒரு பிச்சைக்காரன் துயர்படிந்த உள்ளத்தின் சாவதானநடையில் போய்க்கொண்டிருந்தான். மனதில் என்ன துயரமோ? உள்ளக் கசப்பைப் பிரதிபலித்துக் கொண்டிருந்தது

முகம். நடையிலும் உடலிலும் தளர்ச்சி.

பாதையில் விரைந்து வந்து கொண்டிருந்தது ஒரு கார். பாதையின் குறுக்கே தளர்நடையில் ஒரு குழந்தை! நெருங்கும் கார்...தளர் நடைக் குழந்தை—! குழந்தைக்குத் தெரியுமா, காரில் அகப்பட்டு மடிந்துவிடுவோமென்று? ஒரு நிமிடம் தான்!

"ஐயோ"—ஒரு அலறல் எல்லோருடைய கவனத்தையும் கவர்ந்தது. பாதையின் குறுக்கே பாய்ந்த பிச்சைக்காரன் குழந்தையுடன் ஒரு ஓரமாக ஒதுங்கிவிட்டான். மனித உணர்ச்சிகளை மதிக்காததுபோல் சென்றுவிட்டது அந்தப்

பிஷர். அவனைச்சுற்றி ஒரு சிறுகும்பல்! குழந்தையை விளையாட விட்டுவிட்டு, பூங்காவில் செடி மறைவில் ஆனந்தமாகப் பேசிக்கொண்டிருந்த குழந்தையின் பெற்றோர்கள் செய்தியறிந்து ஓடி வந்தனர்.

அவர்களைக் கண்ட பிச்சைக்காரன் அவர்களையே உற்றுப் பார்த்தான். அவன் கண்களில் நீர் துளிர்த்தது. அவனிடமிருந்த குழந்தை "அம்மா" என்று தன் தாயிடம் தாவியது. குழந்தையின் உயிர்காத்த அவன் தீரச்செயலைப் பற்றிய பேச்சு கூட்டத்தில் எழுந்தது.

"டாக்டர்" என்றான் பிச்சைக்காரன், குழந்தையின் தந்தையை நோக்கி. அவன் குரல் தழுதழுத்திருந்தது!

குழந்தையின் தகப்பனார்—டாக்டர் வாசு திடுக்கிட்டார். பிச்சைக்காரனையாரென்று அவர் புரிந்துகொண்டார். திகைப்பும் வியப்பும் அவரை ஊமையாக்கி விட்டன!

"வாருங்கள்... போகலாம்...." என்று கூறி டாக்டர் முன்னே நடந்தார்.

★

மௌனமுடன் அவர்கள் பங்களாவினுள் நுழைந்தனர். டாக்டரும் பிச்சைக்காரனும் தனித்தனி நாற்காலியில் அமர்ந்தனர். குழந்தையுடன் கல்யாணி ஒருபுரம் நின்றுகொண்டிருந்தாள். பிச்சைக்காரன் அடிக்கடி கல்யாணியை உற்றுப்பார்த்த வண்ணமே இருந்தான். அவன் ஓயாமல் தன்னைப் பார்ப்பது அவளுக்குப் பிடிக்கவில்லை.

"கல்யாணி, நீ குழந்தையை அழைத்துக்கொண்டு உள்ளே போ..." என்றார் டாக்டர் வாசு. குழந்தையுடன் அவள் சென்றுவிட்டாள்.

"கோபால், அன்றிரவு பணத்தைக் கொடுத்துவிட்டுப் போனவன் அதற்குப் பின் வரவே இல்லையே!... எங்கு போயிருந்தாய்?..." டாக்டரின் குரலில் ஆச்சரியம் தொனித்தது.

"எங்கே போவது, டாக்டர்? கல்யாணியின் ஆபரேஷனுக்காக எங்கெங்கோ பணம் கேட்டேன். ஏமாற்றந்தான் மிஞ்சியது. கடைசியில் ஓரிடத்தில் திருடினேன். அகப்பட்டுக்கொண்டேன். இரண்டு வருடக் கடுங்காவல் தண்டனை கிடைத்தது. சிறையில் இருக்கும்போது கல்யாணியின் நினைவு என்னைத் தப்பிச் செல்லத் தூண்டியது. அதிலும் தோல்வி! மேலும் இரண்டு வருடத் தண்டனை கிடைத்தது. அனுபவித்தேன். நேற்றுதான் என்னை விடுதலை செய்தார்கள்... இவ்வளவு துன்பத்திற்கிடையிலும் கல்யாணி சுகமாக மகிழ்ச்சியுடன் இருக்கிறாள் என்ற எண்ணம் எனக்கு ஆறுதலைத் தருகிறது டாக்டர்" என்றான் பிச்சைக்காரன்—கோபால். அவன் குரலில் எல்லை கடந்த சோகம்; கண்களில் நீர்த்துளிகள்!

"கோபால்... ஒன்று சொல்வேன் கேட்பாயா?"

"என்ன, டாக்டர்?..."

"கல்யாணி உன் பெயரையே மறந்து விட்டாள். உன்னைப் பற்றிய எல்லா நினைவுகளையும் அவள் நெஞ்சிலிருந்து காலம் பூரணமாக அழித்துவிட்டது. உன் குரலைக் கூட அவளால் புரிந்துகொள்ள முடியவில்லை. இந்த நிலையில் நீ யாரென்பது அவளுக்குத் தெரிந்துவிடுமானால் அவள் மனதில் பெரும் புயல் எழும்பிவிடும்; பட்டுப்போன உன்னைப் பற்றிய நினைவுகள், மீண்டும் பசுமையுடன் துளிர்விட ஆரம்பிக்கும் பழைய நினைவுகளால் வாழ்க்கையில் நிம்மதி இழந்து தவிப்பாள். அவள் வாழ்வோடு என்வாழ்வு பிணைக்கப் பட்டிருக்கிறது. ஆகவே, நீ எக்காரணத்தாலும் யாரென்பதை அவளுக்குத் தெரிவித்துக் கொள்ளாதே என்றுதான் கேட்டுக்கொள்கிறேன், கோபால்"—மூச்சு விடாமல் பேசிய டாக்டர் முகத்தில் துளிர்த்திருந்த வியர்வையைத் துடைத்துக்கொண்டார்.

சிலைபோல் உட்கார்ந்திருந்த கோபால் சிந்தனையிலிருந்தான்.

"நிம்மதியாக இருக்கும் அவள் வாழ்வில் இனி நான் குறுக்கிடமாட்டேன், டாக்டர்" என்றான் கோபால் தீர்மானமான குரலில்!

டாக்டர் வாசுவின் மனப்புயல் தணிந்தது.

"என்ன கோபால்?"

"கல்யாணியை ஒரு தம்ளர் தண்ணீர் கொண்டுவரச் சொல்லுங்கள். அவள் அன்புக் கையால் கடைசி முறையாகத் தண்ணீர் வாங்கிக் குடித்துவிட்டுப் போய்விடுகிறேன். அனுமதிப்பீர்களா?"

"கல்யாணி, கல்யாணி" என்று அழைத்தார் டாக்டர்.

"ஏன்?" என்றபடி வந்தாள் அவள்.

"ஒரு தம்ளர் தண்ணீர் கொண்டு வா"

உள்ளே சென்ற கல்யாணி அடுத்த சில நிமிடங்களுக்குப் பிறகு, திரும்பி வந்து தண்ணீர் நிறைந்த தம்ளரைத் தன் கணவனிடம் நீட்டினாள்.

"எனக்கல்ல தண்ணீர். அவருக்கு. அவரிடம் கொடு" என்றார் டாக்டர்.

வெட்கத்துடன் தம்ளரை அவனிடம் நீட்டினாள். அவள் வந்தது முதல் அவளையே பார்த்துக்கொண்டிருந்த அவன், அவள் கையிலிருந்த தம்ளரை வாங்கித் தண்ணீர் குடித்தான். 'டக்'கென்று மேஜைமீது வைத்துவிட்டு மீண்டும் ஒரு முறை நன்றாகப் பார்த்தான்.

"நான் வருகிறேன், டாக்டர்" என்று சொல்லி வீட்டிலிருந்து வெளியேறினான் கோபால்.

"யாரது?—" என்று கேட்டாள், ஒன்றும் புரியாமல் கணவனையும் அவனையும் பார்த்துக்கொண்டிருந்த கல்யாணி.

"யாரா? நம் குழந்தையைக் காப்பாற்றிய யாரோ ஒரு மனிதன்" என்றார் டாக்டர் வாசு, கல்யாணியால் அர்த்தம் கண்டுபிடிக்கமுடியாத நீண்ட பெருமூச்சுடன்!

முக்கோணம்

வீர. பழனியப்பன்

“யாரா?...நம் குழந்தையைக் காப்பாற்றிய யாரோ ஒரு மனிதன்...” என்றார் டாக்டர் வாசு, கல்யாணியால் அர்த்தம் கண்டுபிடிக்கமுடியாத நீண்ட பெருமூச்சுடன்!

கல்யாணி வாசுவின் பக்கத்தில் நின்றுகொண்டிருந்த குழந்தை லலிதாவின் முகத்தைப் பார்த்தாள். லலிதா அழுகையை அடக்கமுடியாமல் தினறிக் கொண்டிருந்தாள். கல்யாணி தன் பார்வையைப் போய்க்கொண்டிருந்த அந்த மனிதன்மீது திருப்பினாள்.

அவன் வெளிவாசலைக் கடந்து சென்றுவிட்டான்.

அவளுக்கு ஒன்றும் புரியவில்லை! வாசுவின் பதில் அவளுக்குத் தெளிவை ஏற்படுத்தவில்லை.

“குழந்தைக்கு என்ன வந்துச்சு? யாரதுன்னுகேட்டாப் பெரிசா ஒரு அணுகுண்டைத் தூக்கிப் போடுறீங்களே!”

“வாயைப் பாரு. ஒரு குழந்தையை ஒழுங்கா வீட்டில் வைத்துக் காப்பாத்துறதுக்குத் துப்பில்லாட்டியும் பேச்சிலே மாத்திரம் ஒன்னும் குறையிறதில்லே! உன்பாட்டுக்குக் குழந்தையை வெளியிலே விட்டுட்டு உள்ளேயே உட்கார்ந்துகொண்டு இரு. அது எங்கேயாச்சும் தொலைஞ்சுபோய் எவன் கையிலேயாச்சும் மாட்டிக்கொண்டு செத்துத் தொலையட்டும். அப்புறம் நீயும் நானும் ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக்கொண்டேயிருக்கலாம். நீ குடும்பம் பண்ணுறவளா யோக்கியதையா எனக்குத் தெரியல்லை!”

“நான் என்ன செய்யிறது? லலிதாவைத் தூங்கப் போட்டுட்டுத்தான் உள்ளே போய் வேலையைக் கவனிக்கப் போனேன்...”

“இம்...தூங்கப் போட்டுட்டுப் போனீங்களோ...உன்னைச் சொல்லி ஒரு குற்றமும் இல்லை. எல்லாம் என் புத்திக்கு...”

அவனுடைய வார்த்தைகள் அவளுடைய நெஞ்சிலே தைத்தன. கண்களிலிருந்து நீர்த் துளிகள் உருண்டன.

“அழுகிறதுக்கு வேறே ஆரம்பிச்சுட்டியா.......மூஞ்சியைப் பாரு...சீ..உள்ளே போ...”

கல்யாணி இனிமேல் நின்றால், நிலைமை விரசமாகப் போய்விடும்

என்று எண்ணி உள்ளே போய் விட்டாள்.

லலிதாமட்டும் அப்பாவின் செய்கைகளை ஆச்சரியமாகப் பார்த்துக்கொண்டிருந்தாள். அவளுக்கு உள்ளூர ஏதோ ஒரு பயம் பரவிக்கிடந்தது.

"லலிதா...இங்கே வா... இனிமே நீ இப்படி வெளியே போவியா?"—வாசு அவளை உற்றுப் பார்த்துக்கொண்டே கேட்டான் கோபமாக.

"இம்-ஹூம்...இல்...லே..." குழந்தை அழுதுகொண்டே சொன்னாள்.

"என்ன, அழுவுறே? உம்..."

பளார்....பளார்....இரண்டு அறைகள் குழந்தையின் முதுகில் விழுந்தன.

"இல்லேப்பா....இனிமேல் நா வெளியே போகல்லேப்பா..." லலிதா துடித்தாள்.

"வாயை மூடு..."

லலிதா கையால் தன்னுடைய வாயை மூடிக்கொண்டாள். ஆனாலும் அழுகை மட்டும் வாயைப் பிளந்துகொண்டு வெளிவந்துவிடும் போல் இருந்தது.

"உள்ளேபோய் ஒரு மூலையிலே மூச்சுக்காட்டாம உட்கார்ந்து இருக்கணும்...போ..."

லலிதா பயந்துகொண்டே உள்ளே போனாள். உதட்டை ஒரு முறை 'நறுக்' கென்று கடித்துக் கொண்டான் வாசு.

அவனுக்குக் குழந்தையைக் கொண்டு வந்து விட்டுப்போன அந்த மனிதன் சொன்ன வார்த்தைகள் நினைவுக்கு வந்தன.

'என்ன ஐயா! இந்தக் குழந்தையைக் கவனிச்சுப் பாத்துக்கிறதுக்கு வீட்டிலே அதுக்கு அம்மா கிம்மா கிடையாதா? அது பாட்டுக்கு மேலத்தெரு 'பெட்ரோல் பங்கு' கிட்டே நாலஞ்சு பிச்சைக்காரப் புள்ளைங்களோட பராக்குப் பார்த்துக் கொண்டு நிக்கிறதே! அது கையிலே கழுத்திலே இருக்கிற நகைக்கு ஆசைப்பட்டு எவனாச்சும், எதுவும் செய்துட்டா நாளைக்குக் குழந்தை கிடைக்குமா?'

'அம்மா......!'

'அந்த வார்த்தைக்கும் கல்யாணிக்கும் எதுவும் சம்பந்தமிருக்க முடியுமா?'—அவன் மனதிலே எண்ணங்கள் மின்னவிட்டன. சற்று நேரம் வராந்தாவில் உலாத்திக்கொண்டிருந்தான். அவன் மனதிலே ஏற்பட்ட குழப்பம் தீரவில்லை. காரை எடுத்துக்கொண்டு வெளியே கிளம்பினான்.

2

வெளியே எரிந்துகொண்டிருந்த நெருப்பு விலகிவிட்டாலும், உள்ளே புகைந்துகொண்டுதான் இருந்தது. உள் கட்டிலே கல்யாணி பொருமிக்கொண்டிருந்தாள். கணவன் வாயிலிருந்து வெளிவந்த சொற்கள் அவள் உள்ளத்தைப் புண்ணாக்கி விட்டன.

கார் வெளியே போகும் சப்தத்தைக் கேட்ட லலிதா மெது-

வாகக் கல்யாணியிடம் நெருங்கினுள். அவ்வளவு நாழி அப்பாவின் கட்டளைக்கு அடங்கியிருந்த அழுகையெல்லாம் உடைத்துக் கொண்டு வெளியே வந்துவிட்டது.

"சித்தி...இ...இ..."—மெதுவாகக் கல்யாணியின் மடியில் போய் உட்கார்ந்தாள் குழந்தை.

"அதுதான் உங்கப்பா பாய்ந்தாரே! இப்போ என்னிடத்தில் எதுக்கு வர்சே! போ......"

"இம்...ம்...ம்..." —லலிதா அழுதுகொண்டே நின்றுள்.

"உங்களையெல்லாம் சொல்லி ஒன்றும் பிரயோசனமில்லை! எல்லாம் என் தலைவிதி. செய்யிறது நீ...வாங்கிக் கட்டிக் கொள்வது நான்..."

வாசு காட்டிய கோபத்தையெல்லாம் குழந்தையிடம் காட்டினுள் கல்யாணி.

லலிதாவுக்கு இந்த 'மத்தள நிலைமை' மிகவும் வேதனையை உண்டாக்கியது.

"அப்பா என்னை அடிச்சுப் புட்டு...சித்தி...வலிக்குது..."—தேம்பித் தேம்பி அழுது கொண்டே மீண்டும் கல்யாணியிடம் சென்றுள் லலிதா.

கல்யாணி லலிதாவின் முகத்தைப் பார்த்தாள். அழுகையால் அது சிவந்திருந்தது. அவளுக்கே ஒரு பரிதாபம் உண்டாகியது.



கல்யாணி லலிதாவின் தலை மயிரை ஒதுக்கிவிட்டுக் கண்களில் வடிந்துகொண்டிருந்த நீரைத் துடைத்தாள்.

"ஏன் லலிதா...நான் உன்னைப் படுக்க வைச்சுட்டுத்தானே உள்ளே போனேன். அதுக்குள்ளே எழுந்திரிச்சு எங்கே வெளியே போனே...?"

"வெளியிலே 'டொம்... டொம்' சத்தம் வந்துச்சு... அதைப் போய் பாக்கலாம்னு போனேன் சித்தி... இம்ம்... அப்பா என்னை அடிச்சுப் புட்டு..."

லலிதாவின் வாக்குமூலத்தைக் கேட்டதும் கல்யாணிக்கு அழுவதா, சிரிப்பதா என்று எண்ணினாள். 'பாவம்... தாயில்லாக் குழந்தை' என்ற பரிதாபம் லலிதாவிடம் கல்யாணிக்கு இன்னும் இரக்கத்தை உண்டாக்கியது.

லலிதா அணிந்திருந்த கவுன் வியர்வையால் நனைந்திருந்தது. கல்யாணி அதைக் கழற்றினாள். லலிதாவின் முதுகிலே 'செக்கச் செவேல்' என்று ஐந்து விரல்கள் பதிந்திருந்தன அதைக் கண்டதும் கல்யாணியின் கண்களில் நீர் துளிர்த்தது. அவள் லேசாக லலிதாவின் முதுகைத் தடவிக் கொடுத்தாள்.

அந்த அன்பு வருடலிலே சற்றுநேரம் தன்னையே மறந்து இருந்தாள் லலிதா.

கல்யாணி மனதிற்குள்ளே தன் கணவன் வாசுவின் கைகளுக்குச் 'சாபம்' கொடுத்துக்கொண்டிருந்தாள்.

"சித்தி... அங்கே 'பாம் பாம்' வண்டியெல்லாம் ஓடுது சித்தி... நான் பார்த்தேனே..."

"லலிதா, நான் சொல்றேன் கேளு. இனிமேல் நீ இதுபோலக் கடைத்தெருப்பக்கம் போனே, பூச்சாண்டி உன்னைத் தூக்கிக் கொண்டு போயிடுவான்...தெரிஞ்சுதா?"

"போ... சித்தி... அங்கேதான் நான் ஒரு பூச்சாண்டியைப் பார்த்தேனே. அவன் என்னை எதுவும் செய்யல்லியே! சும்மானுச்சுக்கும் 'அம்மா ஒரு காசு குடும்மா'ன்னு கேட்டுக்கிட்டுல்ல நிக்கிறான்..."

"நீ ரொம்பப் பொல்லாதவள்..." என்று கண்களைச் சிமிட்டிக்கொண்டு லலிதாவை அணைத்து முத்தமிட்டாள் கல்யாணி.

"நான் பொல்லாதவள் இல்லே சித்தி! அப்பாதான் பொல்லாதது.... அதுதானே என்னை அடிச்சிச்சு.."சொல்லிக் கொண்டு வருகையிலேயே குழந்தை விக்கி அழுதது.

கல்யாணியின் நினைப்பு வாசுவின்மீது தாவியது.

'அப்பா...நல்ல அப்பா... சின்னஞ்சிறு குழந்தையை இது போல அடிக்கிற ஆசாமி அப்பாவாம்! பெற்ற தாய் இருந்து இந்த அடிபடும் சம்பவத்தைப் பார்த்திருந்தால்...'-அவளுடைய கண்களில் நீர் கசிந்தது.

"ஏன் சித்தி...நீ அழுவுறே?.." லலிதா காரணம் புரியாமல் கேட்டாள்.

"ஒன்றுமில்லே..." என்று மழுப்பியவாறு கல்யாணி சிரித்தாள்.

"இஹ்ஹிஹ்ஹி..." என்று தன் பச்சைஅரிசிப் பற்களைக் காட்டி லலிதாவும் சிரித்தாள். அவளுக்கு அடிபட்ட வலியெல்லாம் எங்கேயோ பறந்துவிட்டது!

"சித்தி, நம்ம ரெண்டு பேரும் பொம்மை வைச்சு விளையாடுவோமா?"

கல்யாணிக்குக் கவனமெல்லாம் எங்கேயோ இருந்தது.

லலிதா 'குடு குடு' வென்று ஒரு கூடையை எடுத்துக் கொண்டு வந்தாள். அந்தக் கூடையிலே தலைபோன சேவகன் பொம்மை ஒன்று, கால் போன மாட்டுப்பொம்மை ஒன்று, ஆணியில்லாத பம்பரம் ஒன்று, ஒரு வளையம், ஒரு முழு 'செலுலாய்ட்' பாப்பா பொம்மை ஆகியவை இருந்தன.



அவற்றை யெல்லாம் எடுத்து லலிதா கடையைப் பரத்தினாள்.

"சித்தி, விளையாடுவோமா?"

கல்யாணி லலிதாவைப் பார்த்தாள். லலிதாவின் முகத்திலே சிரிப்பு தாண்டவமாடியது. அவளுக்குப் பக்கத்தில் இருந்த 'செலுலாய்ட்' பாப்பா பொம்மையின் மீது அவள் கவனம் நிலைத்தது.

"எனக்கு உள்ளே வேலை இருக்கு. நீ பொம்மையை வைத்து விளையாடு..." என்று சொல்லி அந்தப் பொம்மையை எடுத்து ஒரு ஆட்டு ஆட்டி வேடிக்கை காட்டிவிட்டு உள்ளே சென்றாள்.

லலிதா விளையாட ஆரம்பித்தாள்.

3

வாசுதேவனுக்கு இரண்டாம் கல்யாணம் மிகவும் அடக்கமான முறையிலேயே முடிந்தது. ஆனால் அவன் கல்யாணம் ஆன மூன்றாம் நாளிலிருந்தே மிகவும் ஆடம்பரக்காரனாக மாறிவிட்டான். தினசரி எது தவறினாலும் தவறும், அவன் கல்யாணியையும் லலிதாவையும் அழைத்துக்கொண்டு உலாவப் போகிறது மாத்திரம் தவறவே கிடையாது.

அவன் தன் மனதுக்குள்ளே ஒரு பெரிய திட்டம் போட்டிருந்தான். அதற்காகத்தான் அவன் அவ்வளவு ஆடம்பரம் செய்து வந்தான்.

கல்யாணிக்கோ பதினாறு வயதுதான் இருக்கும். லலிதாவுக்கு நான்கு வயது ஆகிறது. நான்கு வயதுள்ள பெண்ணுக்கு பதினாறு வயதுள்ள மற்றொரு பெண் தாயின் நிலையிலே இருந்து அவளுடைய தாபத்தைத் தீர்த்துவிடமுடியுமா? ஆனாலும் அவர்கள் இருவரின் மன நிலைமைகளையும் பரஸ்பரம் புரிந்துகொண்டால் இதைச் சமாளித்துவிடலாம் என்பது அவனுடைய நம்பிக்கை!

எப்போதும் போலவே அவர்கள் மூவரும் உலாவ வெளிக்கிளம்பினர். அந்த ஊரில் ஒரு பெரிய பொருட்காட்சி சாலையை நகர மைதானத்தில் நகராண்மைக் கழகத்தினர் ஏற்பாடு செய்திருந்தனர். மூவரும் பொருட்காட்சி சாலைக்குள் நுழைந்தனர்.

கடைசியாக அங்கிருந்த பொம்மைக் கடை ஒன்றிற்குள் நுழைந்தனர். அந்தக் கடைக்குள்ளே ஆயிரக்கணக்கான தினுசுப் பொம்மைகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. ஆனாலும் கல்யாணியும், லலிதாவும் ஏககாலத்தில் ஒரு 'செலுலாய்ட்' பாப்பா பொம்மையின் மீது தங்களுடைய ஆசையை வைத்து விட்டனர்.

"அப்பா ... அந்தப் பாப்பா பொம்மையை வாங்கிக்கொடு.."—லலிதா முந்திக்கொண்டு கேட்டு விட்டாள்.

"அந்தப் பொம்மை ரொம்ப அழகாய் இருக்கு!"—தன்னுடைய ஆசையை மறைத்துக்கொண்டு தெரிவித்தாள் கல்யாணி.

"அப்போ ... உங்க ரெண்டு பேருக்கும் அதே பொம்மையிலே ரெண்டு வாங்கி விடவா?" என்று வாசு பொதுவாகக் கேட்டான்.

"எனக்கு என்னத்துக்கு இந்தப் பொம்மை? லலிதாவுக்காகத்தான் அதை வாங்குங்களென்று சொன்னேன்" என்று சிரித்துக்கொண்டே கல்யாணி சொன்னாள்.

"அப்போ சரி..." என்று கேலியாகச்சொல்லிக்கொண்டே அந்தப் பொம்மையை வாங்கி லலிதாவிடம் கொடுத்தான்.

சற்றுநேரம் அந்தப் பொம்மையை லலிதா வைத்துக் கொண்டு அழகு பார்த்தாள்.

"சித்தி, இந்தப் பொம்மையை நீ எடுத்துக்கோ..."என்று அந்தப் பொம்மையைக் கல்யாணியிடம் கொடுக்க வந்தாள். லலிதாவின் தாராளத்தைப் பார்த்ததும் கல்யாணிக்கு ஒன்றும் புரியவில்லை.

"சும்மா நீயே வைத்துக் கொள்..."

"ஏன் சித்தி...ஒனக்கு இந்தப் பொம்மை புடிக்கல்லியா?"

"பிடிக்காமலென்ன லலிதா? பொம்மைதான் அழகாயிருக்கே!"

"அப்புறம் ஏன் சித்தி இதை எடுத்துக்கமாட்டேங்கிறே?" எதிர்பாராதவிதமாய் ஒரு கேள்வியைத் தூக்கிப் போட்டாள்.

"லலிதா, உனக்காகத்தானே இந்தப் பொம்மை வாங்கினது.

நீ இதை வச்சுக்காமல் சித்திக்கிட்டே எதுக்குக் கொண்டு போய் கொடுக்கிறே?"—வாசு சிரித்துக்கொண்டே கேட்டான்.

"போ அப்பா, ஒனக்கு ஒன்னும் தெரியாது! ஒனக்குத்தான் நான் பாப்பா இருக்கேன்! சித்தி வச்சுக்கிறதுக்குப் பாப்பா வேணுமா? அதுக்காகத்தான் இந்தப் பாப்பாவை சித்திகிட்டே குடுத்தேன்!"—இதைக் கேட்டதும் கல்யாணிக்கு வெட்கத்தால் முகம் சிவந்தது.

"அடி...வாலு..." என்று செல்லமாக லலிதாவின் கன்னத்தில் வாசு தட்டினான். அவன் உள்ளத்திலே அடக்கமுடியாத ஒரு மகிழ்ச்சி. லலிதா வாயிலின்றும் அவன் இதுபோன்ற ஒரு பதிலை எதிர்பார்க்கவேயில்லை. அந்த வார்த்தைகளில் தொனித்த ஒப்புறவு அவன் இதயத்தில் பால் வார்த்தது.

'கல்யாணி லலிதாவின் நெஞ்சத்திலே, தான் இருக்கும் இடத்திற்குப் பக்கத்தில் ஒரு இடத்தை அடைந்துவிட்டாள். இனிக் கவலையில்லை!'

அவன் இதயத்தை அமுக்கிக் கொண்டிருந்த பெரிய பாரம் கழிந்தது.

"கல்யாணி, பார்த்தியா லலிதா உனக்குக் கொடுக்கிற பாப்பாவை?"—வெற்றி போதையின் கிறக்கத்திலே கிண்டலாகப் பேசினான் வாசு.

"நீங்க வேணுமானால் அந்தப் பாப்பாவை வைத்துக்கொள்ளுங்கோ! எனக்கு இந்தப் பாப்பாதான் வேணும்" என்று லலிதாவைத் தூக்கிக் கொண்டாள் கல்யாணி.

அவளுக்கு ஏனோ அந்த 'செலுலாய்ட்' பாப்பாமீது அவ்வளவு அலட்சியம்!

வாசு சிரித்தான். அந்தச் சிரிப்பு அவனுடைய திட்டத்தின் வெற்றிமுரசம்.

கல்யாணியும் சிரித்தாள். காரணம் ஒன்றும் அறியாமலேயே லலிதாவும் சிரித்தாள். ஒரே கோட்டிலே மூன்று உள்ளங்கள் மலர்ந்து நின்றன!

★

ஆனால் இன்று...!

சுவர்க்கடிகாரம் ஒன்பது அடித்து ஓய்ந்தது. வெளியிலே கார் வரும் சப்தம் காதைத் துளைத்தது.

"லலிதா...லலிதா ... போய்ப் படு...உங்கப்பா வந்துட்டாரு... இம்...!"—கல்யாணி தன்னிடம் விஷமம் செய்துகொண்டிருந்த லலிதாவுக்கு எச்சரிக்கை செய்தாள்.

சாயங்காலம் வாங்கிய அடியின் பயத்திலே லலிதா கண்களை பலவந்தமாக மூடிக்கொண்டு பாயில் படுத்தாள். அவளுக்குப் பக்கத்திலேவிளையாடுவதற்காகச் சாயங்காலம் எடுத்த சாமான்கள் பரப்பப்பட்டுக் கிடந்தன.

வாசு உள்ளே நுழைந்தான். அவன் முகத்தில் இன்னும் அந்தப் பழைய கடுகடுப்பு இருந்துகொண்டுதான் இருந்தது. கல்யாணி எழுந்து நின்றாள். வாசு அவளைத் திரும்

பிப் பார்க்கக்கூட இல்லை. நேராக உள் கட்டிற்குள் நுழைந்தான். கல்யாணி அவனைப் பின் தொடர்ந்தாள்.

"சாப்பிடல்லியா..."

"எல்லாம் சாப்பிட்டாச்சு..."

வாசு, லலிதா படுத்திருக்கும் பாய் அருகில் வந்து, சற்று நேரம் லலிதாவின் முகத்தையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான். அவனை விட்டு ஒருபெரு மூச்சு வெளிக்கிளம்பியது.

'பட்...டார்...' ஏதோ அவன் கால்களில் பட்டு உருண்டது. வாசு கீழே குனிந்து பார்த்தான். 'செலுலாயிட்' பொம்மைப் பாப்பா தலைகுப்புற உருண்டு கிடந்தது. அவன் மனதிலே அன்று பொருட்காட்சிசாலையில் நடந்த நினைவுகள் மின்னின.

வாசு குனிந்து அந்தப் பொம்மையை எடுத்து லலிதாவின் பக்கத்தில் வைத்தான். உயிர்ப் பொம்மையின் பக்கத்திலே அந்த உயிரற்ற பொம்மை படுத்துக்கொண்டு அவனை ஒய்யாரமாக உற்று நோக்கியது. தலையை நிமிர்ந்து பக்கத்தில் பார்த்தான். கல்யாணி நின்று கொண்டிருந்தாள்.

'......ஒனக்குத்தான் நான் பாப்பா இருக்கேன்! சித்தி வச்சிருக்கறதுக்குப் பாப்பா வேணுமா!..' லலிதாவின் வாயினின்று தெறித்து வந்த மழலை மொழிகள் அவன் நினைவிலே ரீங்கரித்தன. 'ஆமாம்...எனக்குத்தான் நீ பாப்பா! கல்யாணி உயிரற்ற பொம்மையைச் சுமப்பதற்குத் தான் சரி! அவள் தாயற்ற லலிதாவைப் பாதுகாப்பதற்குக் கொஞ்சம்கூட தகுதியில்லாதவள்......' அவனுக்கு மனதுக்குள்ளே ஒரு எண்ணம் குமிழியிட்டது. அலட்சியமாகக் கல்யாணியின்மீது ஒரு பார்வையை வீசிவிட்டு அவன் அங்கிருந்து நடந்தான்.

கல்யாணி வாசுவின் போக்கைக் கண்டு கொஞ்சங்கூட அவனுக்காக இரக்கம் கொள்ளவில்லை. அதற்கு மாறாக அவன் மாலையிலே நடந்துகொண்ட முரட்டுத்தனத்திற்கு அவன் மீது ஆத்திரம் கொண்டபடியே இருந்தாள். அவனுடைய செய்கைகளை வெறும் 'கண் துடைப்பு' என்று எண்ணினாளே ஒழிய, உண்மையான பாசத்தின் பிரதிபிம்பம் என்று அவள் நம்பவேயில்லை!

லலிதா லேசாகக் கண்களைத் திறந்து சுற்றுமுற்றும் பார்த்தாள்.

"உஸ்...ஸ்..." என்று ஆள் காட்டி விரலை உதட்டில் வைத்து மீண்டும் தூங்கும்படி ஜாடை காட்டினாள் கல்யாணி. லலிதா 'சட்' டென்று கண்களை மூடிக்கொண்டாள்.

அடுப்பிலே காய்ந்துகொண்டிருந்த பாலை ஒரு தம்ளரில் ஊற்றிக்கொண்டு வாசு இருக்குமிடத்திற்குச் சென்றாள்.

வாசு தன்னுடைய பிரத்தியேக அறையிலே கையில் ஒரு போட்டோவை வைத்துக்கொண்டு உட்கார்ந்து ஏதோ யோசனை செய்தவாறு இருந்தான்.

கல்யாணி மெதுவாக அவனுக்குப் பின்புறம் சென்று அந்தப் படத்தைப் பார்த்தாள். அந்தப் படம் அவனுடைய முதல் மனைவி—லலிதாவின் அம்மாவினுடையது.

'இவள் மட்டும் உயிரோடிருந்து லலிதா இதுபோல அடிபட்டிருந்தால்......' ஒரு எண்ணம் அவளை உலுக்கிற்று.

அவள் தன்னைச் சமாளித்துக் கொண்டு, "பால் இதோ மேசை மேலே இருக்கு!" என்று சொல்லிப் பால் தம்ளரை மேசை மீது வைத்தாள்.

வாசு 'சட்'டென்று அந்தப் படத்தை மறைத்துக்கொண்டு கல்யாணியை உற்றுப் பார்த்தான். அவள் அவ்விடத்திலிருந்து நகர்ந்தாள்.

"லலிதா....சாப்பிட்டுட்டாளா?"

"அவள் சாப்பிட்டுட்டாள்..."

"இம்...சாயங்காலம் அந்த அடி அடிச்சுட்டு இப்போ இதுனும் விசாரிக்க மனது வந்ததே, ரொம்ப சந்தோஷம்!" லேசாக முணுமுணுத்துக் கொண்டு அவள் அங்கிருந்து நகர்ந்தாள்.

அந்த முணுமுணுப்பிலே அடங்கியிருந்த ஆத்திரம் அவனுக்கு ஆச்சரியத்தை அளித்தது.

'அப்படியானால் கல்யாணி கூட லலிதாவின் நன்மையிலே கவலை எடுத்துக்கொள்ளுகிறாளா?'– இந்த ஒரு கேள்வி அவன் மூளையிலே திரும்பத் திரும்ப ஒலித்தது.

'ஆமாம்...அவளுக்கு லலிதாவைப் பற்றிக் கவலை இருக்கத்தான் வேண்டும். இல்லாவிட்டால் நான் அடித்ததற்காக அவள் இவ்வளவு ஆத்திரப்பட அவசியம் என்ன இருக்கிறது! சாயங்காலம் குழந்தை லலிதா கடைத்தெருப் பக்கம் ஒண்டியாக சென்றதற்காக நான் அவளிடம் சீறினேன். இப்பொழுது முரட்டுத்தனமாக அடித்ததற்காக அவள் என்னிடம் சீறுகிறாள். என்ன வேடிக்கை! தாயற்ற குழந்தை என்ற உணர்ச்சிக் கோட்டிலே நாங்கள் இரண்டு பேரும் இரண்டு முனைகளில் நின்று லலிதாவிடம் அனுதாபம் கொண்டு இருந்திருக்கிறோம்! நாங்கள் இரண்டுபேரும் குழந்தையையும் எங்களையும் பிணைத்திருந்த அனுதாபக் கோடுகளை மட்டும் பார்த்துக்கொண்டிருந்தோமே தவிர, நாங்கள் இருவரும் நின்றுகொண்டிருந்த அந்தக் கோட்டை மறந்து விட்டோம்...முக்கோணம் என்பதை மறந்துவிட்டு வெறும் கோணம் என்று எண்ணியிருந்தால், உண்மை எப்படி விளங்கும்?'

கூடத்திலே லலிதாவுக்குப் பக்கத்தில் கல்யாணி படுத்திருந்தாள். மெதுவாக அவர்களுக்குப் பக்கத்தில் போய் உட்கார்ந்தான் வாசு.

"கல்யாணி, லலிதாவுக்கு அடி ரொம்பப் பலமா விழுந்துட்டுதா?"

"ஆம்...ம்...... நீங்களே பாருங்க..." என்று சட்டையை

விலக்கிக் குழந்தையின் முதுகைக் காட்டினாள். தன்னுடைய விரல்கள் லலிதாவின் முதுகிலே பதிந்திருந்ததைக் கண்டதும் அவனுக்குக் கண்கள் கலங்கி விட்டன.

“ரொம்பப் பலமாகத்தான் அடிச்சுட்டேன்...” தன்னுடைய குற்றத்தை உணர்ந்து பேசினான் அவன்.

“என் மேலே கோபம் வந்ததைக் குழந்தை மேலே ஏன் இப்படிக் கொண்டுபோய் காட்டினீங்க”

அவன் பேசாமல் இருந்தான்.

அதுவரையில் அடக்கமாகக் கண்களை மூடிக்கொண்டிருந்த லலிதா மெதுவாகக் கண்களைத் திறந்து பார்த்தாள்.

ஒரு பக்கம் அப்பாவின் தலைக் குனிவையும், மற்றொரு பக்கம் சித்தியின் அதிகாரத்தையும் கண்டவுடன் லலிதாவிற்குக் கொஞ்சம் தைரியம் துளிர் விட்டது.

“ஆமாம்ப்பா......இனிமே என்னை நீ அடிப்பியா?”

“நீ மாத்திரம் வீட்டிலேயே இருந்தின்னு உன்னை எதுக்கு நான் அடிக்கிறேன்”—அவள் முதுகைச் செல்லமாகத் தடவிக் கொண்டு சொன்னான் வாசு.

“நீ ரொம்ப நல்ல அப்பா...” என்று லலிதா தன்னுடைய கரங்களால் அவன் இரு கன்னங்களிலும் தட்டினாள்.

“நீங்க அடிச்சுட்டுப் போனப்புறம் இந்த வாலு என்கிட்டே வந்து நீங்க ரொம்பப் பொல்லாத அப்பான்னு சொன்னிச்சு.



மகன்: “அப்பா, நீங்கள் பல ஆண்டுகளாக வைத்தியம் பார்த்த மணியக்காரரின் நோயை நான் எவ்வளவு சிக்கிரம் குணப்படுத்திவிட்டேன், பார்த்தீர்களா?”

தந்தை: “சேகர், நான் மாத்திரம் மணியக்காரரின் நோயை இவ்வளவு காலம் நிடிக்கவிடாதிருந்தால், உன்னை எப்படி என்னால் டாக்டருக்குப் படிக்க வைத்திருக்கமுடியும்?”

இப்போ உங்களை ரொம்ப நல்ல அப்பான்னு சொல்லுது!” என்று சொல்லிச் சிரித்தாள் கல்யாணி.

“அப்படியா சொன்னே, லலிதா?”

வாசுவுக்கு வாயெல்லாம் பல்லாகி விட்டது. ‘இம்மிம் மிம்’ என்று லலிதா தலையை ஆட்டினாள். இனிமேல் அவளுக்கு என்ன பயம்?

உதகையிலே!

பிலோ இருதயநாத்

நீலகிரியில் வாழும் நம் பூர்விகக் குடிகளாகிய 'தொதவர்'களைக் காணவேண்டுமென்று அண்மையில் நான் உதகைக்குச் சென்றேன். தொதவர்கள் வசிக்கும் இடங்களுக்கு 'மந்து' என்று பெயர்.

இங்குள்ள கோத்தர்கள், தொதவர்கள், வடுகர், குறும்பர் என்ற நான்கு வகைப் பழங்குடிகளில் தொதவர்களே மிகப் பழமையானவர்கள். இவர்களைத் தொதவர்கள் அல்லது தோடர்கள் என்றும் அழைப்பது உண்டு. தொதர்வகள் வசிக்குமிடம் 'மந்து' என்றும், படகர் வசிக்குமிடம், 'ஹட்டி' என்றும், கோத்தர் வசிக்குமிடம், 'ஹக்கால்' என்றும் கூறுகிறார்கள்.

தோற்றத்தையும் பழக்க வழக்கத்தையும் கவனித்தால், இவர்கள் மலையாளத்திலிருந்து குடியேறி யிருக்கலாம் என்று சிந்திக்கவேண்டி இருக்கிறது. தொதவப் பெண்கள், மலையாளப் பெண்களைப்போல் முகத்தோற்றமுள்ளவர்கள். தொதவர்கள் ஆண், பெண் இரு தாத்தாரும் சிவந்து பருத்துக் காணப்படுவர். உயரம் ஐந்தரை அடிக்குக் குறையாமல் இருப்பார்கள். பெண்கள் தம் கூந்தலை வெண்ணெய் தடவிக் கட்டைவிரல் பருமனுக்குப் பிரித்துத் தொங்கவிட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆண்கள் தலைமயிரும் தாடியும் வளர்த்துக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் அணியும் ஆடை புதுமாதிரி



மந்துக்களில் தோதவர் குழு...

யாக இருக்கும். கருப்பு, சிவப்பு, ஊதா, நீலம், முதலிய வர்ண மிட்டு, கெட்டியான நூலால் நெய்த துணி போலிருக்கும்- அதாவது ஒரு முரட்டுத் துப்பட்டிபோலிருக்கும். நம்மைப் போல் உடுத்துவதில்லை. ஒரே ஒரு போர்வை மாதிரி உடல் பூராவையும் போர்த்திக் கொள்ளுகிறார்கள். சாதாரணமாக ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஆடை அணிவதில் வித்தியாசங்கள் கிடையா. இவ்வித வர்ண நிற ஆடைக்குப் 'புதுக்குளி' எனப் பெயர். இவர்களிடம் சற்றுப் பழகிவிட்டாலோ உடனே நம்மை, 'அண்ணாச்சி' அண்ணாச்சி' என்று அன்பாகக் கூப்பிடுவார்கள்.



வீட்டின் தோற்றம்....

இவர்கள் வாழும் வீடுகள் மிகவும் விசித்திரமானவை. பழைய காலத்தில் பெரிய மாட்டு வண்டிகளில் கூரை போட்டு வளைத்துக் கட்டியிருப்பார்களே, அப்படி இருக்கும் அவை. காட்டுக் கொம்புகளை வைத்துக் கட்டி மேலே கோரைப் புல்லைப் போட்டு வேய்ந்திருப்பார்கள். வீட்டிற்கு முன் பக்கத்தில் ஒரு சிறு வாயில் மட்டுமே இருக்கும். இதன் வழியாகத் தவழ்ந்து தான் உள்ளே போகவேண்டும்.

வீட்டிற்குள் உள்ள திண்ணையில் கம்பளியை விரித்து வைத்திருக்கிறார்கள். விருந்தினரை உபசரிப்பதற்கு வேண்டாமா இவை? திண்ணையில் இவர்களைப் பார்க்குங்கால், பண்டை நாளில் மலையடிவாரத்தில் வசித்துவந்த சரித்திரம் கூறும் நம் பூர்வீகக் குடிகளின் நினைவும் வருவதில் வியப்பில்லையல்லவா?

தொதவர்களுடைய திருமணங்கள் பல மந்துகளில் பல விதமாகக் கூறப்படுகிறது.

தொதவர் பெண்கள் பருவம் அடையச் சில மாதங்களுக்கு முன், ஒரு ஆடவனுடன் தனிமையாக இருக்கவேண்டும். அப்படி இன்றிப் பருவம் அடைந்தால் மந்தை விட்டு விலக்கிவிடுவார்களாம். சாதாரண ஒரு பெண் கர்ப்பந்தரித்து நான்கு ஐந்து மாதங்களுக்குப் பிறகு தான் விவாகம் நடைபெறுமாம்.

> 'மணம் செய்துகொள்ள வேண்டியது இன்றியமையாதது. உனக்கு வாய்க்கும் மனைவி நல்லவளாக வாய்த்துவிட்டால் வாழ்க்கை குதூகலமாயிருக்கும். ஆனால் கெட்டவளாக வாய்த்தாலோ, நீ ஞானியாக வேண்டியதுதான்— அதுவே ஒவ்வொரு மனிதனுக்கும் நல்லது!'
>
> —சாக்ரடீஸ்

நெருப்பில் பல சூடுகள் இட்டு அடையாளம் ஏற்படுத்திக் கொள்வார்களாம். பச்சை முதலியவைகளும் குத்திக் கொள்வார்களாம். இன்னும் சற்றுத் தூரங்களில், மலையின் மேல் இருக்கும் தொதவர்களில் பெண்ணும் ஆணும் முதலில் எங்கேயாவது ஓடிப்போவார்களாம். சுமார் ஒரு வாரம் மறைந்திருந்து, பின்னரே மந்துக்கு வருவார்களாம்.

பெண்ணுக்குக் கர்ப்பந்தரித்ததும் திருமணம் நடக்குமாம். அதுதான் அவர்கள் குடும்பப் பழக்கம்! அப்பொழுதுதான் அவர்கள் வாழ்க்கையும் நலன் பெறுமாம்.

முன்னாளில் தொதவர்களுக்குள் கலியாணத்திற்கு சட்டதிட்டங்கள் எதுவும் இல்லை. தொதவர் மந்துக்குள் பெண் மாற்றங்கள் அடிக்கடி நிகழுமாம். காலமாற்றம் அவர்களையும் சட்டங்களுக்கு அடிபணியச் செய்துவிட்டது.

மனைவிக்குக் கணவன் பிடிக்கவில்லை என்றால் மாமனார் காலில் வணங்கிவிட்டு, தாய்வீடு ஏகிவிடுவாள். குழந்தைகள் எப்பொழுதும் தந்தையையே சேரவேண்டுமாம்.

பல ஆண்டு முயற்சி செய்ததின் விளைவாகத் தற்காலத்தே பதிவுத் திருமணம் அவர்களுக்குள் நிலவி வருகிறது.

உதகையிலே பூர்வக் குடிகளின் வழித்தோன்றல்களான இந்தத் தொதவர்களுடன் தங்கியிருந்த ஒரு சில மணிநேரம் சரித்திரத்தின் இன்ப உலகிற்கு என்னை இட்டுச்சென்றதில் நான் பெரிதும் பூரிப்படைந்தேன்!



மரியாதை...

85 Persons are awarded prizes in our puzzle oN. 8 (1st prize 37, 2nd prize 1, 3rd prize 38 and 5th prize 9 persons)

Full particulars are published in the Rainbow dated *10-5-52*

ரிஜிஸ்டர் நெ. 277 **ரூ. 25,000 பரிசு** போட்டி நெ. 10

MS Premier Bank of India Ltd-ல் *சீல்* செய்துவைக்கப் பட்டுள்ள சரியான விடை அவர்கள் அங்கீகாரத்தின்பேரில் பிரசுரிக்கப்படும். முற்றிலும் சரியான விடை அனுப்புபவர் களுக்கு முதல் பரிசு ரு. 12,000. முதல் இரண்டு வரிசை சரியான விடைக்கு இரண்டாம் பரிசு ரு. 7000. முதல் ஒரு வரிசை சரியான விடைக்கு மூன்றும் பரிசு ரு. 3000. முதல் மூன்று நம்பர் சரியானவிடைக்கு நான்காம் பரிசு ரு. 2000 முதல் இரண்டு நம்பர்கள் சரியான விடைக்கு *5*-ம் பரிசு ரு. 1000 அளிக்கப்படும். எங்கள் ஸீல் வைத்த விடைகள்படி எல்லாம் சரியாக இருக்க வேண்டும். மேற்கண்ட பரிசுகள் எங்கள் கம்பெனியின் நிபந்தனைப்படி வசூலுக்கு தகுந்தபடி பகிர்ந்து கொடுக்கப்படும்.

AMBAL'S PUZZLES

KEY S. NO 8 *22 to 37 -/11

34	33	29	22
24	27	31	36
23	28	32	35
37	30	26	25

We hereby certify that the above is the solution in original deposited with us for *Ambal's Puzzles No* 8 on 27/3/52 in a sealed cover which was opened in our presence to-day and that a copy of the above solution has been lodged with the Bank.

For The Premier Bank of India Ltd

V. Raman... 29.4.52 Manager

முடிவு தேதி 28-5-52 விடை 13-6-52

பிரவேசக் கட்டணம் : கூபன் *1*-க்கு ரு. *1-0-0* 6 கூபன் கொண்ட செட் 1-க்கு ரு. 5-0-0

150

விடைகள் கண்டுபிடிக்கும் விதம்:— 30 முதல் 45 வரையுள்ள எண் களைக் கொடுக்கப்பட்டிருக்கும் கட்டங்களில், மேலிருந்து கீழும், இட மிருந்து வலமும், குறுக்காகவும் எப்படிக் கூட்டினாலும் 150 வரும்படி யாக அமைக்க வேண்டும். ஒரு எண்ணை ஒரே தடவைதான் உபயோ கிக்க வேண்டும்.

விதிகள்:— தனி வெள்ளைக் காகிதத்தில் தேவையான கட்டணத்துடன் எத்தனை கூப்பன்கள் வேண்டுமானாலும் எழுதி அனுப்பலாம். ஒவ்வொரு கூப்பனிலும் பெயர், விலாசம், எண்கள் எல்லாம் ஆங்கிலத்தில் விளக்கமாக எழுதப்பட வேண்டும். பிரவேசக் கட்டணத்தைக் கிராஸ் செய்த போஸ்டல் ஆர்டர் மூலமாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ அனுப்பலாம். மணியார்டர் செய்த ரசீதைக் கூபன்களு டன் சேர்த்து அனுப்ப வேண்டும். வசூலுக்குத் தகுந்தபடி, பரிசு பகிர்ந்து அளிக்கப்படும். போட்டி சம்பந்தமாக மானேஜர் தீர்ப்பே முடிவானது; சட்டபூர்வமாய்க் கட்டுப்படுவது மாகும். போட்டி முடிவு RAINBOW மாதமிருமுறைப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும். அல்லது 4 அணா ஸ்டாம்பு அனுப்பினால் விடை அனுப்பப்படும்.

கூபன்கள் அனுப்பவேண்டிய விலாசம் :—

AMBAL PUZZLE NO 10

28 (14) Thandavaraya Gramani Street, Tondiarpet, MADRAS - 21

காப்பிக் கொட்டைச் சங்கிலி

எஸ். டி. சம்பந்தம்

நன்றாகச் சீரும் சிறப்புமாக இருந்து 'முடி திருத்தும் நிலயம்' என்று விளம்பரப் பலகை போட்டுக்கொண்டு தொழில் நடத்தி வந்தவன் தான் கலியன். தினமும் எட்டும் பத்துமாகவே வருவாய் கிடைத்தும் வந்தது. ஆனல் இப்பொழுது அந்நிலை தடம் மாறிப் போய் விட்டது.

தன் வீட்டின் மேலிருந்த கடனுக்கு வட்டி கட்டியே கலியன் ஆண்டியானன். கடைசியில் அந்தக் கடனிலேயே வீடும் முழுகிப் போய்விட்டது.

இந்நிலையில் கடை வாடகை வேறு ஐந்தாறு மாதங்களாகக் கொடுபடாமல் பாக்கி நின்றிருந்தது. கடைக்குச் சொந்தக்காரன் கேட்டுக் கேட்டு அலுத்துப்போய் 'வழக்குத் தொடருகிறேன்' என்றும் எச்சரித்துவிட்டான்.

கலியன் ஏதேதோ யோசித்தான். அந்தக் கடனைத் தீர்க்க ஒரு வழியும் தென்படவில்லை அவனுக்கு. மெதுவாகத் தன் மனைவி தைலம்மையிடம் பேச்சுக் கொடுத்தான். அவள் ஆதியில் தாயகத்திலிருந்து வந்தபொழுது ஒன்றரைச் சவரனில் ஒரு ஒற்றைவடக் காப்பிக் கொட்டைச் சங்கிலியோடு வந்திருந்தாள். கலியனுக்கு அதைக் கேட்கவே வாயில்லைதான். என்ன செய்வது? தலைக்குமேல் வெள்ளம் வந்துவிட்டதே!

சௌகாரிடம் அடகு வைத்து அந்த மாதத்திற்குள்ளாகவே மீட்டுக் கொடுத்துவிடுவதாகச் சொல்லி, தைலம்மையிடமிருந்து அந்தக் காப்பிக்கொட்டைச் சங்கிலியை வாங்கிப்போனன். அப்பொழுது கலியனுக்கு இருந்த கடனுக்கு அந்தச் சங்கிலியின் அடகுப்பணம் உறை போடக்கூடக் காணவில்லை. நடக்கிறது நடக்கட்டும் என்று அந்தச் சங்கிலியை அப்படியே விற்றுக் கொஞ்சம் கடனை அடைத்தான்.

'முடி திருத்தும் நிலயம்' என்ற தன் விலாசம்கொண்ட பலகை உள்பட, கடையை அப்படியே வீராசாமிப் பண்டிதனுக்கு விற்றுவிட்டு, கடை வாடகைப் பாக்கியைத் தீர்த்தான் கலியன். அன்றையிலிருந்து கலியன் ஏழ்மையில் இன்பங்காணவே தயாரானன்.

புது முதலாளி கொஞ்சம் பணத்தை செலவழித்துக்கடையைச் சீர்பண்ணி, கலியனையும் அங்கேயே மாதச்சம்பளத்திற்கு வைத்துக்கொண்டான்.

எப்பொழுதுமே கலியன் நன்றாக மயிர் வெட்டுபவன். அதிலும் கடையும் கொஞ்சம் சீர்படவே, பழைய வாடிக்கைக் காரர்களெல்லாம் அந்தக் கடைக்கு வர ஆரம்பித்தார்கள். வருமானம் நிறைய வந்தது. அதனால் கலியனுக்கென்ன லாபம்! அவன்தான் முதலாளியாயிருந்து தொழிலாளியாகி விட்டவனாயிற்றே! வரும் மாதச் சம்பளத்தின் வருமானம் போதவேயில்லை அவனுக்கு. வாழ்க்கை வளையத்தின் இரு முனைகளையும் ஒன்று சேர்க்க முடியாமல் திக்குத் திணறித் தான் போனான்.

நாட்கள் ஓடின. தைலம்மையின் கழுத்திலிருந்து காப்பிக் கொட்டைச் சங்கிலியைக் கழற்றி ஒரு மாதத்திற்கு மேலாகி விட்டது. 'இன்றைக்காவது சங்கிலியை மீட்டுக் கொண்டு வரமாட்டாரா' என்று தினம் எதிர்பார்த்தாள் தைலம்மை. பேதை! சங்கிலி அப்பொழுதே கைமாறினதை அவள் எப்படி அறிவாள்?

ஒருநாள் சோறு போட்டுக் கொண்டே தைலம்மை, "என்ன, மறந்தே போயிட்டீங்களா, அந்தச் சங்கிலியை இன்னும் மீட்காமலிருக்கிறீங்களே ..ஊரிலே தங்கச்சிகூட வந்திருக்காளாம். போய்ப் பார்க்கணும் நான். வெறுங்கழுத்தோடே எப்படிப் போகிறது?" என்றாள். அதைக் கேட்டு அப்படியே மருண்டு போனான் கலியன். "ஆ, சங்கிலியா? அதை நான் அப்பவே" என்று உண்மையை உளறப் போனான், உடனே சமாளித்துக் கொண்டு, "ஆமாம்...ஆமாம் இந்த மாதத்திலேயே அதை மீட்டுவிடுறேன்" என்று தலையைச் சொரிந்து கொண்டான்.

அன்றையிலிருந்து கலியன் மனம் குழம்பிக்கொண்டே கிடந்தது. அப்போதிருந்த சூழ்நிலையில் அந்தச் சங்கிலியை ஈடுசெய்ய அவனால் எப்படி முடியும்!

தைலம்மை அடிக்கடி ஞாபகப்படுத்திக் கொண்டிருந்தாள். கலியனும் 'அதோ இதோ' என்று சாக்குப்போக்குச் சொல்லிக்கொண்டு வந்தான்.

மறுமாதமும் மறைந்தது. தைலம்மையின் மனம் அடியோடு வெறுத்துப்போய் விட்டது. கலியனிடம் சரியாய்க் கூடப் பேசுவதில்லை; அவனுக்குத் தெரியும்படி கண்ணீர்கூட உகுத்தாள்.

"கொஞ்சம் பணம் குறைகிறது, அதுதான் பார்க்கிறேன். பணம் கிடைச்சதும் உடனே சங்கிலியை மீட்டு வந்துடமாட்டேனா!" என்றான் அவன் ஒரு நாள்.

"நான் சவுரி விற்று ஏழு ரூபாய் பணம் சேர்த்து வச்சிருக்கேன். இந்தாங்கோ, இதையும் போட்டு எப்படியாகிலும் இன்னிக்கி என் சங்கிலியோட்த்தான் நீங்க திரும்பணும்" என்று சமூகமாகவே பேசிப் பணத்தையும் நீட்டினாள் தைலம்மை.

கலியனின் கைகள் அதை நீட்டி வாங்கவே கூசின. மாசு படிந்த மனமல்லவா? தயக்கத்துடன் பணத்தை வாங்கி இடுப்பில் செருகிக்கொண்டு கடைக்குப் புறப்பட்டான். வழியில் அவன் சாதாரண மூளையில் ஒரு திடீர் யோசனை உதித்தது. உடனே, கடைக்குக் கடையாக அலைந்து அந்த எழு ரூபாய்க்கே தைலம்மையின் காப்பிக்கொட்டைச் சங்கிலி மாதிரியே ஒரு 'ரோல்ட்கோல்டு' சங்கிலியை வாங்கிக்கொண்டு வீடு திரும்பினான்.

"தைலம்மை, எங்கே கழுத்தை நீட்டு...... நானே போடுகிறேன்." என்று அந்தச் சங்கிலியைக் கலியனே அவளுடைய கழுத்தில் அணிவித்தான். காப்பிக்கொட்டைச் சங்கிலியைக் கண்டதும் தைலம்மைக்குக் கட்டுக்கடங்காத ஆனந்தம் பொங்கியது. அன்றைக்குச் சாப்பாட்டுக்கு இரண்டு கரி கூடவே பண்ணி வைத்தாள் கலியனுக்கு.

அப்பொழுதும் அவள் கேட்டாள், "இது என்ன புதுசாயிருக்கே" என்று.

"சங்கிலியை மீட்டு அப்படியே மெருகு போட்டு வந்தேன்" என்று சமாளித்துக்கொண்டான் கலியன்.

தைலம்மை புதுச்சங்கிலியைப் பார்த்துப் பார்த்துப் பூரித்துப் போனாள். ஆனால் அதைக் காணும்பொழுதெல்லாம் கலியன் மனம் கவலையுறும்; பேதையை இப்படி ஏமாற்றிவிட்



டோமே" என்ற எண்ணம் அடிக்கடி மேலெழுந்து அவனைத் துன்புறுத்தும்.

"ஏன் கொஞ்ச நாளாய் என்னமோமாதிரி இருக்கீங்க? உங்க முகத்தைப் பார்த்தாலே ஒரு மாதிரியாயிருக்கே?" என்று தைலம்மை ஒருநாள் கேட்டுவிட்டாள்.

"ஒன்றுமில்லையே" என்று சிரிப்பை வரவழைத்துக்கொண்டான் கலியன்.

அன்று தைலம்மை தன் தாய் வீட்டுக்குப் புறப்படத் தயாரானாள். கொஞ்சம் கம்பு இருந்தது. அதை மாத்திரம் இடித்து அவசர அவசரமாகக் கொழுக்கட்டை பண்ணினாள். ஒரு அலுமினியச் சட்டியில் சுடச்சுட அதை அடுக்கித் துணியையும் போட்டுக் கட்டிவைத்தாள்.

ஆனால் அன்று மாலை கலியன் கடையிலிருந்து ஒரே காய்ச்சலோடு வந்து சேர்ந்தான். வலது கை வேறு தூக்கமாட்டாமல் உள்ளங்கையிலே வீங்கியிருந்தது. வந்ததும் உடனே படுத்துவிட்டான்.

தைலம்மையின் பயணம் நின்றுவிட்டது. அவசர அவசரமாகக் கலியனுக்குப் பணிவிடை பண்ணினாள். இரவு வெகுநேரம் விழித்திருந்து தலைவலிக்குத் தவிட்டு ஒத்தடம் கொடுத்தாள். கை கால்களையும் பிடித்துவிட்டாள்.

விடிந்ததும் ஜுரம் விட்டிருந்தது. ஆனால் உள்ளங்கையில் 'ஜிவ் ஜிவ்'வென்று ஒரு பெரிய கட்டி புறப்பட்டிருந்தது.

தைலம்மை யார் யாரையோ கேட்டு ஏதேதோ வைத்தியம் செய்தாள். ஒன்றும் குணத்தைக் காணோம். நாளுக்கு நாள் கட்டி சிவந்து பெரிதாகிக்கொண்டே வந்தது. ஒருநாள் வண்டி வைத்துக் கலியனை மெதுவாய் வைத்தியரிடம் அழைத்துப் போனாள். அவர் கட்டியைப் பரிசோதித்துவிட்டு "இது ஒரு விஷக் கட்டியாச்சே! உடனே அறுத்தாகணுமே! இல்லாவிட்டால் ஆபத்தாகிவிடுமே!" என்று பெரும் பீதியைக் கிளப்பிவிட்டார். அதைக் கேட்ட தைலம்மைக்குச் 'சொரேல்' என்றது. பணத்தைப் பக்கத்தில் வைத்தால்தானே கட்டியில் கத்தியை வைப்பான் வைத்தியன்!

தைலம்மை அங்கேயும் இங்கேயும் பணத்திற்கு அலைந்தாள். பலனில்லை.

ஆனால் கலியன் வலியைப் பொறுத்துக்கொண்டு "உம். கட்டி உடையாமலா போய்விடும்!" என்று தன் மனைவிக்குத் தைரியம் சொன்னான்.

தைலம்மைக்கு மனம் கேட்கவே இல்லை; கழுத்திலிருந்த காப்பிக்கொட்டைச் சங்கிலியைக் கழட்டினாள்.

"இது ஒன்றரைச் சவரன் தானே? அப்படித்தான் எனக்கு ஞாபகம்" என்றாள்.

கலியன் திகைத்துப்போய் "ஏன்?" என்றான்.

"இதோ இப்பொழுதே கடைக்குப் போய் இதை விற்று வந்துவிடுகிறேன்; நாளைக்காவது

உங்கள் கட்டியை அறுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டாமா?" என்று கேட்டுவிட்டுப் புறப் பட்டாள்.

கலியன் "என்ன!" என்று அலறிக்கொண்டே படுக்கையி லிருந்து, வெடுக்கென்று எழுந்து உட்கார்ந்தான்; எக்கி இடது கைத்தை நீட்டித் தைலம்மையின் காதைப் பிடித்திழுத்தான்.

"அந்தச் சங்கிலியைக் கொண்டா இப்படி" என்று அதைப் பிடுங்கித் தன் தலையணை யின் அடியில் வைத்துக்கொண்டு அப்படியே படுத்துக்கொண்டு விட்டான்.

"வேண்டாம். சங்கிலியை இப் படிக் கொடுங்கள்" என்று தைலம் மையும் பக்கத்திலேயே உட் கார்ந்துவிட்டாள்.

"உங்களுக்கு உடம்புக்கு வந்து இதுமாதிரி ஆபத்தா யிருக்கும்பொழுது எனக்குச் சங்கிலியில்லாமல்தானா குறைச் சல்! உங்கள் உதவிக்கு இல் லாத இந்தச் சங்கிலி எனக்கு என்ன அப்படி!" என்று தன் கண்களைத் துடைத்துக் கொண்டே சொன்னாள் தழு தழுத்த குரலில்.

தைலம்மையின் தியாக உணர்ச்சியையும், தன் பொய்யின் விளைவையும் ஒப்பிட்டுப் பார்த் தான். அவன் உடலும் உள்ள மும் உயிரும் ஒருங்கே துடித் தன. அவன் கண்களிலிருந்து நீர் வழிந்தது. அப்படியே பூமி வெடித்து, தான் அதல பாதாளத்திற்குப் போய்விட்டால் தேவலஎன்றிருந்ததுஅவனுக்கு!





மனோசித்ரம்

7. கடிதமும், கதையும் கருத்தைக் கலக்கின!

திருவாளர், மாஜி கல்வி மந்திரியார் குமாரலிங்கம் பிள்ளை அவர்கட்கு, வணக்கம்.

அன்புடையீர்,

என்னை அடித்தீர்கள்; உதைத்தீர்கள்; கள்ளன் என்ற பட்டம் சூட்டிக் கடுந்தண்டனை வாங்கிக் கொடுத்தீர்கள்—கவலையில்லை!

நான் கள்ளனல்ல!

சுமார், பதினேறு ஆண்டுகட்கு முன்னே, நான் ஒரு தீவிரமான சீர்திருத்தவாதியாக-சமதர்மவாதியாக — தேசத்தொண்டனுக இருந்தேன், இருக்கிறேன்! எனக்கு, ஏழை என்றால் இனிக்கும்! சீமான் என்றால் கசக்கும்! எனக்குச் சாதிகள் என்றால் சாக்கடை நாற்றம்! சமதர்மம் என்றால் சந்தனவாடை! இதுதான் என் ரத்தத்துடன் ரத்தமாய்க் கலந்துவிட்டிருக்கும் உன்னதமான லட்சியம்! வாழ்க்கை முறை! இந்தச் சுபாவம், எல்லோருக்கும் வரவேண்டும், எல்லோரும் மனிதனுக வாழவேண்டும் என்ற அன்புப் பண்பு எல்லோருக்கும் உதிக்கவேண்டும்; செயலாற்றவேண்டுமென்றெல்லாம் விரும்பினேன். 'சாதியா?—அதைச் சமுத்திரத்தில் எறி! மதமா?—அதை மண்ணில் புதை! மடமை வளர்க்கும் புத்தகமா?—அதை மண்ணெண்ணெய் ஊற்றிக் கொளுத்திச் சாம்பலாக்கு! மனிதனை ஏமாற்றுகிற மனிதனு?—அவன் மண்டையைப் பிள!' இப்படியெல்லாம் என் நாட்டு மக்களிடம் இடைவிடாது ஓயாமல் பிரசாரம் செய்தேன்.—

புத்தகங்கள் பல எழுதினேன்! என் பேச்சையும், பேனாவையும் கண்டு இந்தப் பணக்காரர்கள் ஆட்சி நடுங்கிற்று! சிதிற்று! 'நாட்டைக் கொடுக்க வந்தவன்' என்ற பட்டத்தைத் தந்து என்னைச் சிறையில் அடைக்க முனைந்தார்கள் ஆட்சியாளர்கள். போலீஸ் புலிகள் என்னைத் துரத்தி வந்தார்கள். நான் ஓடியிருக்கமாட்டேன்; ஒளிந்திருக்கமாட்டேன்! ஆனால் ஓடி ஒளிய வேண்டிய நிலையை எனக்கு ஏற்படுத்தி வைத்தது, தாயை இழந்த என் பத்துமாத குழந்தை! நான் என் அருஞ்செல்வத்தைத் தூக்கிக்கொண்டு எங்கெங்கோ ஓடிப் பதுங்கினேன்! 'போலீஸ் புலிகள்—செந்தலைகள்—என்னை விடாமல் 'மோப்பம் பிடித்துக் கொண்டே வந்தன!

கடைசியில் யோசித்தேன். அந்த யோசனையில் உதித்த முடிவின்படி குழந்தைப் பேறின்றிக் குமைந்துகொண்டிருந்த உங்கள் பங்களா வாசலில் மனோரஞ்சிதச் செடியடியில் என் குழந்தையைக் கிடத்திவிட்டு ஓடினேன். நீங்கள் என் கண்மணியை எடுத்துக் காப்பாற்றிக் கொள்வீர்கள் என்று திடமாக நம்பி மனநிம்மதியடைந்து ஓடினேன்... ஓடினேன்...ஒளிந்தேன். கடைசியில் ஒருநாள், ஒரு பத்தாம் பசலியால் நாலைந்து ஏக்கர் நிலத்துக்கு ஆசைப்பட்டுத் தியாகியாக மாற வழி தேடிக்கொண்டிருந்த ஒரு துரோகியால்—நான் போலீஸ் புலிகளிடம் சிக்கினேன். சுட்டுத் தொலைப்பார்கள் என்றுதான் எண்ணினேன். தூக்குத் தண்டனை கிடைக்குமென்றுதான் நினைத்தேன். அப்படியொன்றும் நடக்கவில்லை. ஆனால் பத்து வருடக் கடுங்காவல் தண்டனைதான் கிடைத்தது. தண்டனையை மகிழ்வுடன் ஏற்றுச் சிறைக்குப் போனேன். ஒரு விகார ரோகியுடன் என்னை அடைத்தார்கள், அந்தக் கருணையாளர்கள்! அந்தக் குஷ்டரோகியுடனேயே உண்டு, உறங்கி, உழைத்துப் பத்து வருடங்களையும் கழித்தேன். விடுதலையடைந்தேன். நான் சிறையை விட்டு வெளி வந்தபோது என் கூட இருந்த ரோகியைவிடப் பழுத்த ரோகியாக வெளி வந்

> திருமணத்தன்று இரவில் அந்த இளம் படைத்தலைவனின் மனைவி திடீரென்று மூர்ச்சித்து விழுந்து விட்டாள். உடனே போனில் "ஒரு யுவதி என் அறையில் மூர்ச்சித்துக் கிடக்கிறாள். உங்கள் குடும்ப டாக்டரை அனுப்புங்கள்" என்று சொன்னான்.
>
> அப்போது மூர்ச்சை தெளிந்த மணமகள் "அன்பரே, அவரிடம் நான் உங்கள் மனைவி என்று தெரிவியுங்கள்" என்று சரிப்படுத்தினாள்.
>
> "அவள் என் மனைவி என்று உங்களிடம் சொல்லும்படி கூறுகிறாள்" என்று சொல்லி ரிசீவரை மேஜைமீது 'டக்'கென்று வைத்தான் அந்தப் படைத்தலைவன்!
>
> —வெஸ்டர்

தேன்! நீங்கள் சிந்திக்கவேண்டும். மனிதன் செய்யக்கூடியதா இந்த அக்கிரமத்தை! இந்தக் கேடுகெட்ட ஆட்சி ஒழிய வேண்டுமென்றால் 'தேசத்தியாகிகள்' என்று போலிப்பட்டம் பெற்ற நீங்கள் உள்பட ஒரு சிலர் தொண்டை கிழிய அலறுகிறீர்கள்! எப்படியும் தொலையுங்கள்!

"சிறையிலிருந்து விடுதலையானதும் நேரே உங்கள் பங்களாவுக்குத்தான் வந்தேன். மனோரஞ்சிதம் என்ற மனோகரமான பெயர் சூட்டப்பெற்று தங்கச் சிலைபோல் வளர்ந்திருந்த என் அருமைக் குழந்தையைக் கண்டேன். அவள்தானா என்று சிறு சந்தேகமடைந்து, அவளின் இடது கால் கட்டைவிரல், பக்கத்து விரலுடன் ஒட்டிக்கொண்டிருப்பதைக் கண்டு என் சந்தேகத்தைத் தீர்த்துக்கொண்டேன். என் குழந்தைக்குப் பிறக்கும்போதே இப்படியிருந்த இது ஒன்றுதான் சொட்டை! என் உயிர்ச் செல்லம் உங்களின் மகளாக வளருவதை எண்ணி உள்ளம் பூரித்துப் போனேன். மகிழ்ந்து சிரித்தேன். நீங்கள் வந்தீர்கள்; அடித்தீர்கள்; உதைத்தீர்கள்; என்ன கொடுமை செய்தாலும் பாவாயில்லை! என் செல்லத்துடன் பேசினால், கண்ணால் பார்த்தால்—போதுமென்ற பாசந்தான் எனக்கு மேலோங்கி நின்றது. எங்கெங்கேயோ அலைந்து திரிந்து உழைத்துச் சம்பாதித்துச் சேமித்த சிறுதொகையில்



"...சேதுவை எப்போது கூப்பிட்டாலும் அவன் காண்டீனுக்குப் போயிருப்பதாகச் சொல்கிறீர்களே, அவனுக்கு ஆபீசில்தான் வேலையா, அல்லது காண்டீனில் வேலையா.?"

என் கண்மணிக்குத் தங்கச் சங்கிலி வாங்கி வந்தேன். அருமை மகளுக்கு அதை அணிந்து மகிழப்போன சமயத்தில் மறுபடியும் அடி! உதை! அத்துடன் திருட்டுப் பட்டமும் கிடைத்தது; சிறைவாசமும் கிடைத்தது! இரண்டாவது தடவையாகச் சிறைக்கு வந்திருக்கிறேன் முதலில், என் கொள்கைக்காகச் சிறைக்குப் போனேன். தேசத்துரோகி என்ற பட்டமும், குஷ்டரோகி என்ற பட்டமும் பெற்றேன். இரண்டாவதாக என் மகளுக்காகச் சிறைக்கு வந்திருக்கிறேன். கள்ளன் என்ற பட்டமும் பெற்றேன். இன்றிரவோ நாளைக் காலையோ எனக்குப் 'பிணம்' என்ற பட்டமும்

கிடைக்கும் என்று நினைக்கிறேன்.

இனி, மனோரஞ்சிதம் உங்கள் மகள்.

இப்படிக்கு
எஸ். பி. ராமநாதன்

...சிறையிலிருந்து, சாவதற்கு முன் எழுதிய அந்த ரோகிக் கிழவனின் —மனோரஞ்சிதத்தின் தந்தையின்—கடிதத்தைப் படித்து முடித்த குமாரலிங்கத்திற்கு மனங்கலங்கியது; கண்கள் குளமாகின. அவர் ஸ்தம்பித்து நின்றார். அந்தச் சமயத்தில்—

திடீரென்று எழும்பிய கூச்சல் மேல்மாடியிலிருந்து சாமந்தியம்மாவிட்ட அலறல்—அமைதி சூழ்ந்த அந்தப் பங்களாவில் இடி இடித்ததைப் போலக் கிடுகிடுத்தது!

"அய்யோ!...என் செல்வமே! மனோரஞ்சிதம்! போய் விட்டாயா!......"

அப்புறம்?

அதோ!...கருமேகப் படலங்கள் மண்டிக்கிடக்கும் வான வெளியிலே ஒரு சாவுக் குருவி மரண ஓலமிட்டுப் பறந்தோடுகிறது பாருங்கள்! அந்தச் சாவுக் குருவியின் மரண ஓலத்திற்கு 'மனோரஞ்சிதம் இறந்து விட்டாள்!' என்பதுதான் அர்த்தமாயிருக்கும் என்று நான் நினைக்கிறேன். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

இலங்கைச் செய்திகள்

தமிழ்ப்பித்தன்

நேர்மை

கடந்த தேர்தலில் யு. என். பி. எதிர்ப்புப் பிரசாரமூலம் வெற்றி பெற்ற திரு. பொன்னம்பலமும் அவரது கோஷ்டியார் சிலரும் மந்திரிப் பதவிக்கு ஆசைப்பட்டு யு. என். பி.யிடம் நிபந்தனையற்ற சரணாகதி அடைந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

அச்சமயம், மக்களுக்குக் கொடுத்த வாக்கினின்றும் மாறுபட விரும்பாது, தமிழ்க் காங்கிரஸ் கட்சியினின்றும் விலகிய திரு. செல்வநாயகம் கோஷ்டியார் ஆரம்பித்ததுதான் தமிழர்க்குச் சமஷ்டி அரசியல் முறையைக் கோரும் தமிழரசுக் கட்சி. அக்கட்சி வெற்றி பெறட்டும்.

தேர்தல் நிலை

அகில இலங்கையும், மாற்றுக் கட்சியினர் மாறுபட்ட மதியினர் கூட யாழ்ப்பாணத் தேர்தல் முடிவைத்தான் ஆவலோடு எதிர் நோக்கிக் கொண்டிருக்கின்றார்கள். தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. பொன்னம்பலத்தைத் தமிழரசுக் கட்சிச் சார்பில் டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் எதிர்த்து நிற்கிறார். மக்களின் ஆதரவு முழுவதும் டாக்டர் நாகநாதன் பக்கமே இருப்பதாக விஷயமறிந்த அரசியல் வட்டாரங்கள் பேசிக்கொள்கின்றன.

முடிவு

இலங்கை வாழ் இந்திய மக்களின் ஜீவாதார உரிமையான வாக்குரிமை பறிக்கப்பட்டமையால், நடக்கவிருக்கும் தேர்தலில் லட்சக் கணக்கான இந்தியர்களுக்கு வாக்குரிமை கிடையாது போய்விட்டது. அதிருப்தி மக்களிடையே பூரணமாக நிலவியிருக்கிறது. அரசாங்கத்தைப் பல தடவைகள் பேட்டி கண்டு, அது பலனளிக்காததால் அகிம்சா முறையில் சத்தியாக்கிரகம் செய்ய இலங்கை இந்தியக் காங்கிரஸ் முடிவு செய்துள்ளது.

ஆடும் மாடும்

டி.கே.சீனிவாசன்



பதினாறாவது அத்தியாயம்

குடைராட்டினம் போலச் சுற்றிக்கொண்டிருந்தது வாழ்க்கை. அதில் இணைத்திருக்கும் குதிரைகளாகச் சுழன்று கொண்டிருந்தனர், மோகனா—சேகர்—சினிமாக் கம்பெனி முதலாளி—சுந்தரி ஆன நால்வரும். எத்தனையோ நினைவுகளும் நிகழ்ச்சிகளும் அந்தக் குதிரைகளின் மேல் ஏறிச் சவாரிசெய்து கொண்டிருந்தன. ஒன்றையொன்று முந்தவோ, ஒன்றோடொன்று முட்டிகொள்ளவோ முடியாதபடி அந்தக் குதிரைகள் நான்கும் ராட்டினத்தோடு இணைக்கப்பட்டிருக்கின்றன என்பதை அவைகளில் எந்தக் குதிரையும் உணரவில்லை. எதனாலோ இயக்கப்படுகிறோம் என்பது தெரியாமலே ஏதோ ஒரு இலட்சியத்தைக் குறியாக வைத்துக்கொண்டு வட்டமிட்டுக்கொண்டிருந்தன.

தேய்ந்த லாடங்களைப் பொறுக்கி உருக்கி உருவாக்குவதைப்போல, தாழ்ந்திருந்த மோகனாவைத் தலைநிமிர்ந்து வாழும் நிலைக்கு மாற்றிக் கொண்டிருந்தது அவளுக்கமைந்த சூழ்நிலை. உலகத்தை அவள் ஓரளவுக்கு உணர்ந்தாள். அதன்மீது ஆதிக்கம் செலுத்துகிறவர்கள் மட்டும் அழுகிப்போன உள்ளம் படைத்தவர்களாகவே ஏன் இருக்கிறார்கள் என்பதுதான் புரியவில்லை அவளுக்கு. உள்ளம் பழுதுபடுவதால்தான் உலகத்தை ஆட்டிவைக்கவேண்டும் என்ற எண்ணமே ஏற்படுகிறதோ என்ற சந்தேகங்கூடத் தோன்றியது அவளுக்கு. இந்த ஆர்ப்பாட்டக்காரர்களின் அடிமைகளாகவே நல்ல உள்ளம் படைத்தவர்கள் நடந்துகொள்வதைப் பார்த்துத்தான் அவள் ஆச்சரி

யப்பட்டாள். இதனால் கொஞ்ச நஞ்சம் எஞ்சியிருக்கும் சேதப் படாத பொருள்கள் கூடச் சித றிக்கொண்டிருந்தன. வாழ்வுக்கு ஒரு வாய்ப்பு கட்டிக்கொள்ளா விட்டால் மறுபடியும் வழுக்கி விட நேருமோ என்ற அச்சத் தால் அலைக்கழிக்கப்பட்டாள் அவள்.

சேகரனுக்கு உலகமே மோகனாவாகத்தான் தோன்றி யது. அவளையே கூர்ந்து கவ னிப்பான். அவளுடைய நெஞ் சில் நிறைந்திருக்கும் நெருப்பு அவன் கண்களில் படும்—ஆனால் கருத்தைத் தொடாது. தூண் டிலைக் கையில் வைத்திருப்பவ னாக இருந்தால் உள்ளே துழா விப் பார்க்கவேண்டும் என்ற எண்ணம் பிறந்திருக்கும்; தூரி கையை வைத்திருந்ததால் அந் தத் துர்ப்பாக்கியவதிக்காக அனு தாபப்படுவதைத் தவிர வேறு எதுவுமே தோன்றவில்லை அவ னுக்கு.

“அழகு எப்போதும் அழக் கூடாது, மோகனா; அது சிரிக்க வேண்டும்!” என்பான் எப் போதோ சில சமயங்களில்.

தன் உள்ளத்தைப் பற்றிய கவலை இவனிடம் ஏன் உண்டாக மாட்டேனென்கிறது என்பது புரியாமல் போகும் மோகனா வுக்கு அப்போதெல்லாம். அவளே அதைத் திறந்து காட்டி விட்டால்... அனுதாபத்துக்குப் பதிலாக ஆத்திரம் உண்டானால்..! ஒவ்வொரு பேச்சையும் அளந்து பேசினாள்; ஒவ்வொரு செயலை யும் நிதானித்துச் செய்தாள்; எவர் அவர்கள் இடையில் புகுந் தாலும் அவர்களைப்பற்றிப் புரிந்த பிறகே பழகினாள்.

வேட்கையால் வெந்துகொண் டிருந்தார் சினிமாக் கம்பெனி முதலாளி. சோமுவின் மேல் அவர் நடவடிக்கை எடுத்ததே அவளை நெருக்கடிக்குள்ளாக்கித் தன் விருப்பத்தை ஈடேற்றிக் கொள்ளத்தான். ஆனால் அவனோ ஓடி ஒளிந்துவிட்டான். சுந்தரி விடு தூதால் எந்தவிதப் பலனும் ஏற்படவில்லை. அவள் இவர் சொல்வதையெல்லாம் ஸ்டுடியோவிலேயே மறந்து விட்டுத்தான் வீட்டுக்குப் போவாள்! என்னென்னவோ முயற்சிகள் செய்தும் தனக்கு இணங்க மறுக்கும் இந்த மோகனா......! ஏக்கம் தாங்காது துடித்தார் படமுதலாளி. உறக் கம் தராது ஓடி மறைந்தன பல இரவுகள்!

அப்படி ஒன்றும் ஆள் பஞ்சம் ஏற்பட்டுவிடவில்லை அவருக்கு. அவருடைய மனம் இரங்காதா என்று ஏங்கித் தவிக்கும் சூழ் நிலையில் எத்தனையோ அழகிகள் இந்தப் பாழாய்ப்போன சமு தாயத்தில் இருக்கத்தான் செய் திருக்கிறார்கள். படித்தபெண்கள் கூடப் படஉலகில் அடியெடுத்து வைக்க அவருடைய அன்புக்கும் அருளுக்கும் துடித்துக்கொண் டிருந்தனர். ஆனால்...... கிட்ட இருப்பதும் எட்டிப்பிடிக்கக் கூடியதுமானவைகளை எடுத் துப் பார்க்கவும் அவருக்கு மனம் வரவில்லை. பதுங்கியும் மறைந் தும் [illegible]

கனைத் தான் தேர்ந்த வேட்டைக்காரன் தேடித் தொடருகிறான். காமுகனும் ஒரு வேட்டைக்காரன் தானே—முறை மாறினாலும், துறை வெறுபட்டாலும்! அதனால்தான் மோகனை ஒருத்தியே மோட்சமாகத் தென்பட்டாள் அந்தச் சினிமாக் கம்பெனி முதலாளிக்கு. அந்த மோட்சத்தை நரகமாக்கும் முயற்சியில் வெற்றி கிடைக்காவிட்டால், தன் ஆண்மைக்கே பங்கம் ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சங்கூட ஏற்பட்டது அவருக்கு.

தன்னைச் சுற்றி நடக்கும் ஒவ்வொன்றையும் சுந்தரி உணர்ந்தாள். இவற்றின் விளைவு என்ன



வாருமோ என்ற கவலைதான் ஏற்பட்டது அவளுக்கு. சேகரன் சிந்தனையில்லாத ஒரு சித்திரம் போலவே அவளுக்குத் தோன்றி னன். மோகனவைப் புரிந்து கொள்ள முடியவே இல்லை அவனல். அவர்கள் இருவரும் சிற பிள்ளைகளைப்போலக் கண்ணு மூச்சி விளையாடுவதைக் காண அவளுக்குச் சிரிப்புத்தான் ஏற் பட்டது. நாடகத்தில் வரும் காதலர்களைப் போலக் கூட அவர்கள் நடந்துகொள்ளவில்லை. விவரந் தெரியாத குழந்தைகள் 'அப்பா அம்மாவிளையாட்டு' விளை யாடுவதைப்போல அவர்கள் பேசுவதும் நடப்பதும்...தப்பித் தவறி அவர்கள் மணமுடித்துக் கொண்டால் தாம்பத்திய உறவு ஒழுங்காக அமையுமா என்று கூட அவள் சந்தேகப்பட்டாள்!

ஒருநாள் நகைச்சுவை நிறைந்த காட்சியொன்றைப் பட மெடுக்க இருந்தார்கள் ஸ்டுடி யோவில். சுந்தரியும் மோகனவும் அதைப்பார்க்க வந்திருந்தார்கள். படம் பிடிப்பதற்கு முன்னல் நடிகர்களுக்குப் பயிற்சியளித் துக்கொண்டிருந்தார் டைரக்டர். எழில்வல்லி ஒருத்தி அங்கிருக் கிருள் என்ற உடனேயே அங் கிருந்த எல்லோருக்கும் தங்கள் தகுதி திறமைகளை வெளிப் படுத்தவேண்டும் என்று தோன் றியது. 'எக்ஸ்ட்ரா'க்களும் எடுபிடிகளுங்கூட அவர்களும் அங்கே இருக்கிருர்கள் என் பதைத் தெரிவித்துக்கொள்ள தங்களாலான முயற்சிகள் அத் தனையும் செய்தனர்.

"என்ன சுந்தரி, எல்லோரும் சரியாக நடிக்கிருர்களா?" என்று மோகனவைப் பார்த்துக் கொண்டே கேட்டார் முதலாளி.

இதழ்களிலே ஒரு புன்ன கையை உருவாக்கி, அதையும் ஓர் உளியாக்கி, அவர் உள்ளத்தை நோக்கி வீசியெறிந் தாள் சுந்தரி. வலி தாங்காது துடித்துப் போனர் முதலாளி.

"இந்த இடத்தில் எல் லோருமே நடிக்கிருர்கள். ஏன் நடிக்கிருர்கள் என்பதுதான் எனக்கே விளங்கவில்லை!" என்று அவருக்கு பதிலும் சொன்னள்.

இதற்குள் காட்சியில் ஏதோ ரசமான கட்டம் நடந்துவிட் டது. அடக்கமுடியாது உரைத் துச் சிரித்தாள் மோகன. நெடு நாட்களாக இதற்காகவே காத் திருந்தவரைப்போல அப்போது அவள் கொடுத்த 'போஸை' ஒரு 'ஸ்டில்'லாக்கி விட்டார் 'காமராமேன்!' படமெடுத்தான பிறகுதான் என்ன நடந்தது என்பது தெரியவந்தது மோகன வுக்கு. அதற்குமேல் அங்கிருக்க அவளுக்கு மனமில்லை.

"வா சுந்தரி, போகலாம்" என்று சுந்தரியை அழைத்துக் கொண்டு போய்விட்டாள்.

அத்தனை விளக்குகள் எரிந் தும் ஏன் அங்கே திடீரென இருள் சூழ்ந்துகொண்டது என்பது புரியாமல் போனது அங்கிருந்தோருக்கு.

வீட்டுக்குப் போய்க்கொண் டிருந்தபோது அன்றைய நிகழ்ச்சிகளைப் பற்றியே நினைத் துக்கொண்டிருந்தாள் மோகன.

ஸ்டுடியோவில் இருந்த எல்லோருக்குமே இவளிடம் ஏதோ ஒன்று தேவையாக இருந்தது. அது என்ன என்பதை இவள் தெரிந்துதான் இருந்தாள். ஆனால் அதற்குத் தகுதியற்றவர்கள் கூட இவளைச் சுற்றி வளைவதும் குழைவதும்......ஆபாசத்தை அடிப்படையாக்கி அவர்கள் எழுப்பி உயர்த்தியிருக்கும் கட்டிடத்தில் அவளைத்தான் அரசியாயிருக்க விழைக்கிறார்கள். இவளுடைய பழைய வாழ்வைப்பற்றி அவர்களில் எவருக்காவது தெரிய நேர்ந்தால்...அவளை சோமு முதன் முதலில் சந்தித்தபோதுசொன்ன சொற்கள் மோகனாவின் கவனத்துக்கு வந்தன.



“மட்டரகங்கள் மத்தியிலே மதிப்போடு உலாவவேண்டுமானால், மோகனா! எதையும் மறைத்து வைத்தால்தான் அது முடிகிறது!”

அந்தக் கருத்துக்களின் ஆழத்தை அப்போது அவளால் தெரிந்துகொள்ள முடியவில்லை. உள்ளே மூழ்கி ஊடுருவிப் பார்க்கும்போதுதான் உண்மை தெரிய வருகிறது. இவ்வளவு அனுபவம் பெற்ற சோமுவா அருவருக்கத்தக்க முறையில் அவளோடு...உள்ளேயிருக்கும் தேங்காய் அழுகியிருப்பது தெரியாமல் வெளியே ஓடு மூடியிருப்பதைபோல, ஆபாசத்தை அறிவால்...சோமுவை மோகனாவால் மறக்கவே முடியவில்லை. அவன் அவளுக்குச் சிற்பியாகத் தென்பட்டான். சேகரைப்போல சித்திரக்காரனாக இல்லை! கல்லை உடைத்துச் சிலையாக்கும்போது சிதறும் துண்டுகளைப்பற்றி எந்தச் சிற்பிதான் கவலைப்படுவான்!

“என்ன அக்கா, சிந்திக்கிறாய்?” என்று கேட்டாள் சுந்தரி.

அதை எப்படி அவளிடம் சொல்லுவது என்று சிந்திக்கத் தொடங்கினாள் மோகனா, எப்படியோ தன்னைத்தானே சமாளித்துக் கொண்டு. “சேகர் சொன்னதை நினைத்தால் சிரிக்கும்படி இருக்கிறது” என்றாள்.

“சிரிக்கும்படிக் கூடவா சேகரால்பேச முடிகிறது?” என்று கேட்டாள் சுந்தரி.

“என்ன சுந்தரி, இப்படியெல்லாம் பேசுகிறாய்?” என்று மோகனா சொன்னபோது கோபந்தொனிக்கவில்லை அவள் குரலில்; சோகந்தான் வெளிப்பட்டது.

“கோபித்துக் கொள்ளாதே, அக்கா. அப்படி என்ன அவர் சொன்னார்?”

“அழகு எப்போதும் அழக் கூடாதாம்; சிரிக்கவேண்டுமாம்!”

சுந்தரியின் சிந்தனைகள் எங்கெங்கோ அலைந்தன. தன்னையே

மறந்தவளைப்போல, "அழகை விரும்புகிறவர்களே அதற்கு ஆபத்தை உண்டாக்கி வைத்திருக்கிறார்கள் அக்கா. அதனால் அழகிகள் தங்கள் உள்ளங்களையும் அழகாக வைத்திருக்க முடிவதில்லை. கர்வம் அல்லது கண்ணீர் இவையிரண்டில் ஒன்றைத்தான் உலகம் அவர்களிடம் உண்டாக்கி விடுகிறது!" என்றாள்.

தெளிவற்ற இந்தச்சொற்களின் பொருள்பற்றி மோகனா கவலைப்படவேயில்லை. அதற்கேற்ற நிலையிலும் அப்போது அவள் இல்லை. துடுக்குத்தனமாக முதலாளியிடம் பேசும் சுந்தரி தன்னிடத்தில் மட்டும் தயாத்தோடு உரையாடுகிறாள் என்பதைப் பற்றியே சிந்திக்கத் தொடங்கினாள்.

"முதலாளியிடம் பேசுவதைப் போல என்னிடமும் நீ ஏன் பேசுவதில்லை, சுந்தரி?" என்றாள்,

"அவரைப்பற்றி உனக்கு தெரியாது அக்கா. ஆசையை வளர்த்துக்கொண்டு அவதிப்படுகிறார்" என்று அப்போதும் விஷயத்தைத் தெரிவிக்க மனமில்லாமல் மூடி மறைத்துப் பேசினாள்.

மோகனாவுக்கு விஷயம் தெரியாமல் இல்லை. இந்த ஆசைதான் தன்னை வீதியிலிருந்து இழுத்து வந்து வீட்டுக்குள் புகுத்தி விண்ணை நோக்கவும் செய்திருக்கிறது என்பதை அவளே உணர்வாள், ஆனால் அதைப்பற்றிப் பேச அவள் மனம் இடந்தரவில்லை.

"இது தன்னாலே அடங்கி விடும், சுந்தரி" என்றாள்

"இல்லை அக்கா. ஆசை தன்னாலே அஸ்தமிப்பதே இல்லை"

"பின் எப்படித்தான் அதை அடக்குவது?"

"ஆற்றல் படைத்தவர்கள் தங்கள் சக்தியால் சாதித்துக் கொள்ளுவார்கள்; அறிவாளிகள் சக்திக்குட்பட்ட பொருள்களுக்கு மாற்றிக்கொள்ளுவார்கள்; பைத்தியக்காரர்கள் அடக்கி விடலாம் என்ற முயற்சியில் ஈடுபட்டு அவதிப்படுவார்கள்; முட்டாள்கள்......?" என்று இழுத்து நிறுத்தினாள் சுந்தரி.

"முழுவதையுந்தான் சொல்லிவிடேன்" என்று செல்லமாகக் கோபித்துக்கொண்டாள் மோகனா.

"அர்த்தமில்லாமல் அதை வளர்த்துக்கொண்டு திண்டாடுவார்கள்!" என்று முடித்தாள் உடனே.

இருவரும் சிரித்துவிட்டார்கள். கார் போகும் அந்த வேகத்தில் எதிரிலிருந்து வந்த காற்று அந்தச் சிரிப்பலைகளை வாரியெடுத்துச் சுற்றிலும் வீசியெறிந்தது. அந்த மத்தியான நேரத்தில் வீதியில் நடமாடிக்கொண்டிருந்த ஒரு சிலரின் கவனத்தை இழுத்துவிட்டது இந்நிகழ்ச்சி. ஆனால் உச்சி வெய்யிலில் எதையும் உற்சாகத்தோடு ஏற்றுக் கொள்ள அவர்களால் முடியவில்லை. படாடோப வாழ்வின் பரிதாபச் சின்னங்கள் வேலை தெரியாமல் வேடிக்கை நடத்துகின்றன என்ற நினைவால்



வெறுப்புத்தான் உண்டானது அவர்களிடம். யாரோ ஒருவன் காரித் துப்பினான். ஆனால் கார் மட்டும் எங்கேயோ திரும்பி மறைந்துவிட்டது.

மோகனாவின் படம் முதலாளியின் பார்வைக்கு அனுப்பப்பட்டது. சேற்றில் கல்வீசியது போலானது அவர் மனதிலை. அந்தப் படத்தையே பார்த்துக்கொண்டிருப்பார். மாம்பழ முகம்......ஆப்பிள் கிறக் கண்கள்......அவளுடைய ஒவ்வொரு அங்கமும் இனிக்கும் கனியாகத் தெரிந்ததே தவிர ரசிக்கும் அமைப்பாகவே தெரியவில்லை அவருக்கு. இந்தப் பெண்ணிடம் அவர் அடைந்து வரும் தோல்விகள்......எட்டாக் கனிகளைக் கூடப் பணம் என்ற ஏணியால் எட்டிப் பறித்துப் பசியாறியிருக்கிறார். பதுக்கி வைக்கப்பட்ட அழகிகள் சிலர்கூட அவருடைய படுக்கையறைப்பதுமைகளாக......அவருடைய அனுபவம் வேறு அவருக்கு ஆத்திரத்தை உண்டாக்கியது. உள்ளத்தின் கனல் உடலில் அனலை வீசத் தொடங்கிற்று. உருக ஆரம்பித்தார் அவர்.

அன்று சுந்தரிமட்டும் தனியாக ஸ்டுடியோவுக்கு வந்தாள். வழக்கம்போல முதலாளியின் அறைக்குள் நுழையப்போகும்போது, உள்ளே லீலாவும் அவரும் பேசிக்கொண்டிருந்தது அவள் காதில் விழுந்தது. கதவுக்கருகிலேயே ஒதுங்கியிருந்து கவனிக்கத் தொடங்கினாள்.

"நீங்களும் ஒரு ஆண்பிள்ளை என்று சொல்லிக் கொள்ளுகிறீர்களே. இவளைச் சரிப்படுத்தவா உங்களால் முடியவில்லை?"—லீலாவின் குரல்.

தூக்கி வாரிப்போட்டது சுந்தரிக்கு. இந்த வினோதமான மனோதத்துவத்தை அவளால் விளங்கிக்கொள்ள முடியவில்லை. இப்படிக்கூட ஒரு பெண்ணால் பேசமுடியுமா என்று ஆச்சரியப்பட்டாள், ஒருவேளை மோகனாவையும் ஒரு உதவாக்கரையாக்கிவிட்டால், ஒத்த ரகந்தான் அத்



அனையும் என்று நாம் பிரித்துத் தனி உயர்வு கொடுக்கும் நிலை மறைந்துபோகும் என்ற நினைப்பால்......

"முயற்சி செய்து பார்த்தேனே லீலா. முடியவில்லையே"

"இவள் கிடக்கிறாள்; விட்டுத் தள்ளுங்கள். காசை வீசியெறிந்தால் அதன் ஓசையைக் கேட்டே ஓடிவர எத்தனையோ அழகிகள் காத்திருக்கிறார்கள்."

பொறாமை பொங்கி வழிந்தது லீலாவின் குரலில். ஆத்திரத்தோடு பேசினாள்.

"இல்லை லீலா. அவளை மறக்க என்றால் முடியவே முடியாது."

"என்னதான் சொல்லுகிறாள் அவள்?"

"அவள் எங்கே என்னோடு பேசினாள்? சுந்தரிதான் சொன்னாள். உயிர் போனாலும் ஒழுக்கந்தவற மாட்டாளாம்!"

ஏதோ ஒருவித களிப்பு சுந்தரிக்கு ஏற்பட்டது. பாம்பேரியைப் புகழ்ந்தால்...

"அப்படிப்பட்ட பெண்கள் கூடவா இந்த உலகத்தில் இருக்கிறார்கள்?"

ஆச்சரியம் காணப்பட்டது லீலாவின் குரலில். அதற்குமேல் பொறுத்திருக்க சுந்தரியால் முடியவில்லை.

"இருக்கிறார்களே, நமக்கே தெரியாமல்!" என்று சொல்லிக்கொண்டே உள்ளே நுழைந்தாள் சுந்தரி.

கொள்ளைக் கூட்டத்தைச் சுற்றிப் போலீஸார் வளைத்துக்கொண்டதைப் போல இருந்தது அவர்கள் இருவருக்கும். ஆதியிலிருந்தே கேட்டுக்கொண்டிருந்தாளா, அல்லது பாதியில்தான் வந்தாளா என்று புரியாமல் திகைத்தார்கள். பொருளோடு திருடனைப் பிடித்த போலீஸ் காரனைப்போல கர்வத்தோடு அவர்கள் இருவரையும் பார்த்தாள் சுந்தரி. மேஜைமேலிருந்த மோகனுவின் படத்தையும் பார்த்துவிட்டாள். ஆனால் குப்பையைக் கிளற அவளுக்கு மனம் வாராததால் வேறு என்ன பேசலாம் என்று சிந்தித்து முடிவுக்கு வந்தாள்.

"என் உங்கள் முகம் வாடியிருக்கிறது? இளைத்துக் கூடப் போய் விட்டீர்களே" என்று முதலாளியை நலம் விசாரிக்கத் தொடங்கினாள்.

"ஆமாம். உடம்புக்குச் சுகமில்லை" என்றார் அந்த முதலாளி இரக்கத்தக்க குரலில்.

"உங்கள் நோய்க்கு மருந்து அவ் புத்தகத்தில் மருந்திருக்காதே; மன்மத சாஸ்திரத்தையல்லவா புரட்டிப் பார்க்க வேண்டும்!" என்று சிரித்துக்கொண்டே லீலா இருந்த பக்கம் திரும்பினாள் சுந்தரி.

குனிந்த தலையை நிமிர்த்தாமல் சிறிது நேரம் இருந்துவிட்டு ஏதோ அவசர வேலையிருப்பதைப் போல அங்கிருந்து எழுந்து சென்றாள் லீலா. சண்டமாருதமாக மாறாமல் பிரச்சனை வெறும் சலசலப்போடு முடிந்துவிட்டதே என்று சந்தோஷப்பட்டார் முதலாளி.

"சுந்தரி, இன்னுமா உனக்கு மனமிரங்கவில்லை?" என்றார் முதலாளி சிறிது நேரங்கழித்து.

"என் மனம் இரங்கித்தான் எத்தனையோ நாட்கள் ஆகிவிட்டனவே" என்றாள் சுந்தரி தன் குறும்பைக் கொஞ்சங்கூடக் குறைத்துக்கொள்ளாமல்.

"இல்லை சுந்தரி, மோகனா விஷயம்..."

உடனே ஒரு சிரிப்பை உதறி விட்டாள் சுந்தரி.

"ஏன் சுந்தரி சிரிக்கிறாய்?"

"நிலாவோடு கொஞ்சிக் குலாவலாம் என்று ஆசைப்படுகிறீர்களே, அதற்காகத்தான்"

"சுந்தரி!"

"ஏன்?"

"எப்படியாவது ஒரு நாளைக்கு......"

"ஒரு வேளைக்குக்கூட முடியாதே!"

"நிரந்தரமாக நானே அவளை என்னோடு......"

"நிச்சயதார்த்தம் சேகரனோடு நடத்திக்கொண்டாளே அவள்!"

அதற்குமேல் அவளைக் கெஞ்ச முதலாளிக்கு மனம் வரவில்லை. சுந்தரி போன பிறகு நெடுநேரம் சிந்தித்துக்கொண்டிருந்தார். ஒரு வேளை பட உலகில் அவளை ஒரு மொக்காகவே வைத்திருப்பது தான் மனமாற்றத்துக்குத் தடையாக இருக்கிறதோ? மலரச் செய்துவிட்டால்......! வளர வேண்டும் என்ற ஆசை—விளம்பர மோகம்—விளைவு...? விவேகத்துக்கு மாறான நடத்தை! பட உலகப் பாவையர்களைப் படுகுழியில் தள்ளும் இந்தப் பாதையை உணர்ந்திருந்தார் அவர்—அமைத்ததே அவர் தானே!

திடீரென ஒருநாள் திரை உலகம் தெரிவிக்கும் திடுக்கிடும் செய்தி யொன்றைத் தாங்கி வெளிவந்தன தினத்தாட்கள் அத்தனையும். விரித்த வலையில் வந்து விழுந்துவிட்டாளாம் அழகி ஒருத்தி! இந்த அபூர்வமான நிகழ்ச்சியை அத்தனை ரசிகர்களுக்கும் தெரிவித்து அவர்களை ஆச்சரியத்துக்குட்படுத்தின. சூடான இந்தச் செய்தியும் அதைத் தொடர்ந்த சுவைமிக்க நிகழ்ச்சிகளும்......

அகில உலகமும் அழிந்தொழிந்தால்கூட அக்கறையில்லை என்றிருப்பவர்கள்கூடப் பத்திரிகைவாங்கத் துணிந்தனர். அத்தனை பத்திரிகைகளும் வாடிக்கைக்காரர்களுக்குக் கூடக் கிடைக்காமல் பறந்துவிட்டன. 'புதுமுகம்—புதுப்படம்!' என்ற தலைப்பில் முழுப் பக்கத்தையும் அடைத்துக்கொண்டு தன் முகத்தைப் பதித்திருந்தாள் மோகனா. வாய்விட்டுச் சிரிக்கும் வசீகரமே உருவான அவள் தோற்றம் வாலிப உலகத்துக்கு விடும் அறைகூவல் போன்றிருந்தது. ஆனால்... அந்தச் சிரிப்பை அனுபவித்தவர்கள் யாரோ ஒரு சிலர்தான்! "முகமே இப்படியிருந்தால் முழு உடலும்......" என்று வாக்கியத்தை முடிக்காமல்—ஆனால் முறிக்காமல்—வளர்த்துப் பெருக்கிக் கொண்டே போனவர்கள் தாம்

பலர். படமாக இருந்த நிலையி லேயே பலருடைய கைகளில் சிக்கிப் படாத பாடுபட்டுக் கொண்டிருந்தாள் மோகனா!

"அக்கா இதைப் பார்த் தாயா?"—படத்தை மோகனவுக் குக் காட்டினாள் சுந்தரி.

உடலில் ஒருவித சிலிர்ப்பு உண்டானதை உணர்ந்தாள் மோகனா. அந்தப் படத்தையே பார்த்தாள்—ரசித்தாள்—சலிக்கா மல் பார்த்துக்கொண்டேயிருந் தாள்! கண்ணாடிக்கு முன் நின்று படத்தில் இருப்பதைப்போலவே முகத்தை வைத்துக்கொண்டு சிரிக்கவும் முயற்சி செய்தாள்— முடியவில்லை.

அந்த வீட்டில் அலங்கோல மாகக் கிடந்த பொருள்களையெல் லாம் ஒழுங்காக எடுத்து அடுக்கத் தொடங்கினாள் சுந்தரி. மோகனவுக்கு அது ஆச்சரிய மாக இருந்தது.

"என்ன சுந்தரி செய்கிறாய்?"

"வீட்டைச் சுத்தப்படுத்து கிறேன்."

"ஏன்?"

"உலகமே இங்கே இப்போது ஓடிவரப்போகிறது."

"எதற்காக?"

"எனக்கென்ன இதைப் பற்றித் தெரியும்? ஒரு நட்சத் திரம் பிறந்துவிட்டதென்றால் நாட்டை அது எவ்வளவு பாதிக் கும் தெரியுமா? பத்திரிகை நிரு பர்கள் எல்லாம் அதைத் தேடித் திரிவார்கள். அவள் எப்படி அழ கைக் காப்பாற்றுகிறாள் என்று தெரிந்துகொள்ள ஆசைப்படு வார்கள் பெண்கள். அந்த அழகை எப்படிக் கைப்பற்றலாம் என்று திட்டங்கள் போடுவார் கள் ஆண்கள். அந்த நட்சத்திரத் தின் 'லக்ஸ் சோப்' அழகை யும், 'பாண்ட்ஸ் க்ரீம்' மெருகை யும், 'கோலினோஸ்' புன்ன கையையும், 'ஈனோஸ்' சுறு சுறுப்பையும், 'கேசவர்த்தினி' கூந்தலையும், அவளுக்குப் பிறக் கும் 'க்ளாக்ஸோ' குழந்தை களையும், விளம்பரப் படுத்து வார்கள் வியாபாரிகள்!"

"இதெல்லாம் தெரிவிக்காமல் இருக்க முடியாதா, சுந்தரி?" என்று கேட்டாள் மோகனா ஏக்கத்தோடும் வேதனையோடும்.

"ஐயோ! உலகம் உன்னைப் பற்றித் தெரிந்துகொள்ளா விட்டால் உடனே சுற்றாமல் நின்றுவிடும். நிலத்தில் நிலைத் திருக்கும் பொருகள் எல்லாம் பறக்கத் தொடங்கி விடும். நீ இப்போது ஒரு அகில உலகப் பிரச்னையாகி விட்டாய், அக்கா!" என்றாள் சுந்தரி.

அயர்ந்து போனாள் மோகனா. உடனே, எப்படித் திடீரென்று பூகம்பம் உண்டானது என்பது புரியவில்லை அவளுக்கு. "நீயார்? எந்த ஊர்? ஏன் சினிமாத் துறைக்கு வந்தாய்?" என்று சுற்றியிருந்து யார் யாரோ கேட்பதுபோலத் தெரிந்தது. பாம்புகளும் தேள்களும் அவளைச் சுற்றி நெளிந்தன.

"இந்த நேரத்தில் நீங்கள் இல்லையே, சோமு!" என்று மனதுக்குள்ளாகவே அழுது புலம்பத் தொடங்கினாள் மோகனா! (தொடரும்)



சி. வி. எஸ். ஆறுமுகம்

மங்கம்மா சாலை எனப்படும் மதுரை வழியில், கடையநல்லூருக்கு நாலைந்து மைல் தெற்கே இருக்கிறது அந்த இடிந்த மடம். ஒருநாள் நான் எதிர்பாராதவிதமாக அந்த மடத்தில் இராத்தங்க நேர்ந்தது. அதை 'ஊமையன் மடம்' என்று குறிப்பிட்டார் என்னுடன் படுத்திருந்த பெரியவர்.

மதுரைக்குத் தெற்கே ஆங்காங்கு குன்று, கோட்டை, தோப்பு, துறவு முதலிய சில இடங்களுக்கு 'ஊமையன்' என்ற அடைச்சொல்லோடு பெயர் அமைந்திருந்ததைக் கவனித்திருந்தேன். அவை எல்லாம் பாண்டி நாட்டு வீரன் ஊமைத்துரையின் ஞாபகச் சின்னங்கள் என்று சொன்னார்கள்.

எனவே 'ஊமையன் மடம்' என்று அந்த மடத்தைக் குறிப்பிட்டபோது, அதற்கு அந்தப் பெயர் எதனால் ஏற்பட்டது என்பதை அறிய எனக்கு ஆவல் உண்டாயிற்று. அதைப்பற்றி நான் விசாரித்தபோது, அந்தப் பெரியவர் சொன்ன வரலாறுதான் இந்தக்கதை!

* * *

சுமார் நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் புலிக்குத்தி நாயக்கர் என்பவர் தமது மனைவியுடன் அந்த மடத்தில் வசித்து வந்தார். அப்போது அது ஒரு வழிப்போக்கர் சத்திரமாக இருந்தது. அதற்கு எட்டுக் காணி நிலம் மானியமும் இருந்தது. நாயக்கர் அந்த நிலத்தை மேற்பார்த்துக்கொண்டு அந்த

மடத்தில் வசித்துவந்தார். அப்போது கிழக்கே பாஞ்சாலங்குறிச்சி இரணகளமாகிக்கொண்டிருந்த சமயம். கும்பினிப் பட்டாளம் பாஞ்சைக் கோட்டைக்குள் பிரவேசித்து விட்டனவென்றும், ஊமைத்துரையைப் பீரங்கி முன்னால் நிற்கவைத்து 'அக்கினிமேசர்' துரை சுட்டுவிட்டானென்றும் ஒரு செய்தி பாவியிருந்தது. முதல் நாள் காலையில் அந்தச் சாலையோடு போன ஒரு மறவர்படை, இந்தச் செய்தியை வழியில் சொக்கம்பட்டியில் கேட்டுத் திரும்பி வடகரைக்குப் போயிருந்தது.

அன்று அந்த மடத்தில் புலிக்குத்தி நாயக்கர் அடுப்புப் பற்றவைக்கவில்லை. செய்தி கேட்டதிலிருந்து பிரமை பிடித்தவர்போலிருந்தார். கிழவியை ஊருக்கு அனுப்பிவிட்டுப் பாஞ்சாலங்குறிச்சிக்குப் போய் ஒரு வெள்ளைக்காரனையாவது சாய்த்துவிட்டுத் தானும் செத்துப்போகலாமா, அல்லது செய்தி ஊர்ஜிதமாகும்வரை பொறுத்திருக்கலாமா என்று யோசித்துக்கொண்டிருந்தார்.

இருட்டி நள்ளிரவும் ஆகிவிட்டது. நாயக்கருக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. உள்ளே போய்ப் படுப்பதும் வெளியே வந்து உலாவுவதுமாக இருந்தார். அப்போது சாலையிலிருந்து விலகி ஒரு ஆள் மடத்தை நோக்கி வருவது மங்கிய நிலவில் தெரிந்தது.

'அந்நேரம் அங்கு வருவது யாராக இருக்கும்?' என்று நாயக்கர் கவனித்துக்கொண்டு நின்றார். 'ஒருவேளை அது ஓடிப்போன நல்லானாக இருக்குமோ' வென்று எண்ணியபோது ஆத்திரத்தால் அவர் உடல் பதறியது.

இந்த நல்லான் நாயக்கருடன் கொஞ்சக் காலத்துக்கு முன்னால் வசித்து வந்தவன். தாய் தகப்பனில்லாத அனாதை என்று அவரிடம் வந்தான். தனக்கு உதவியாக வேலைசெய்வான் என்று அவனுக்குச் சோறு போட்டு வளர்த்து வந்தார். ஆனால் அவன் பெரியவனானபோது, மண்வெட்டிபிடித்து நிலத்தில் வேலை செய்வது அவனுக்கு விருப்பமில்லாமல் போயிற்று. எங்காவது பெரிய இடங்களுக்குப் போய் பெரும் காரியங்களில் ஈடுபட்டுப் பேரும் புகழும் அடைய எண்ணினான்.

கொஞ்சக் காலத்துக்கு முன் பாஞ்சாலங்குறிச்சியில் படை திரட்டுகிறார்களென்று கேள்விப்பட்டபோது, தானும் போய்ச் சேரவேண்டுமென்று சொன்னான். அதற்கு வேண்டிய தகுதி அவனிடம் இல்லையென்று நாயக்கர் தடுத்தார். ஆனால் அவன் ஒரு நாள் சொல்லிக்கொள்ளாமல் ஓடிவிட்டான்.

சிலநாட்களுக்குப் பிறகு அவன் பாஞ்சாலங்குறிச்சியில் ஒற்றர் படையிலிருப்பதாகச் செய்தி அனுப்பியிருந்தான்.

அதன்பின் கட்டப்பொம்மன் பிடிபட்டுத் தூக்கிலிடப்பட்ட பிறகு, அவன் தற்போது கும்பினிப் படையில் இருப்பதாக ஓலை எழுதியிருந்தான்.

நாயக்கருக்கு அப்போது வந்த ஆத்திரம் கொஞ்சநஞ்சமல்ல. 'உண்ட வீட்டுக்குத் துரோகம் செய்வானு பாவி' என்று ஓலையைக் கிழித்து நெருப்பில் போட்டுவிட்டுக் குமுறிக்கொண்டிருந்தார்.

'இப்போது வருவது அவனுக இருந்தால் அவனை என்ன செய்யலாம், என்று நாயக்கர் எண்ணிக் கொண்டிருக்கும்போதே, அந்த உருவம் நெருங்கி வந்துவிட்டது. அருகில் வந்தபோது அது வேற்ருள் என்று தெரிந்தது. நெடிதுயர்ந்த ஆஜானுபாகுவான அந்த ஆளின் துணி பூராவும் ரத்தக்கறை படிந்திருந்தது.

நாயக்கர் பதட்டத்துடன் உள்ளே போய் விளக்கை ஏற்றிக் கொண்டு வெளியே வந்தார். விளக்கு வெளிச்சத்தில் வந்த உருவத்தின் முகத்தைப் பார்த்ததும், எல்லையற்ற ஆச்சரியத்தால் மலைத்துப் போனுர்.

வந்தவர் ஏதோ ஜாடை காட்டவும், நாயக்கர் அந்த ஆளை உள்ளே அழைத்துச் சென்ருர். மனைவியை எழுப்பி வெந்நீர் போடச் சொல்லி, இரத்தக் காயங்களைக் கழுவிக் கட்டினுர்.



பால் கொண்டுவந்து கொடுத்தார். வந்தவர் களைப்பின் மிகுதியால் சற்று நேரத்தில் அயர்ந்து தூங்கிப் போனார்.

நாயக்கர் மனைவி "யார் இந்த ஆள்?" என்று ரகசியமாகக் கேட்டாள்.

"உஸ்..." என்று வாயில் கை வைத்துக் காண்பித்து, நாயக்கர் வெளியே வந்தார்.

சற்று நேரத்தில் தெற்கேயிருந்து சாலைவழியே நாலைந்து திவட்டி வெளிச்சங்கள் வந்து கொண்டிருப்பது தெரிந்தது. தொடர்ந்து குதிரைகளின் குளம்போசையும்கேட்க ஆரம்பித்தது. நாயக்கர் திகைத்து நிற்கும் போதே எழெட்டுக் குதிரை வீரர்கள் மடத்துக்கு எதிரே வந்து நின்றார்கள்.

"ஏய்! இங்கே இருக்கிறது யார்?" என்று சத்தம் போட்டுக் கேட்டான் குதிரைமேலிருந்த ஒரு வெள்ளைக்காரன். நாயக்கர் ஒரு கட்டாரியை எடுத்து மடியில் செருகிக் கொண்டு "நான் தான் இருக்கிறேன்" என்று வெளியே வந்தார். வெள்ளைக்காரன் கையில் துப்பாக்கி இருந்தது. "அந்த ஊமையன் இங்கே வந்ததை நீ பார்க்கவில்லை?" என்று கேட்டான் துரை. அதைப் புரிந்து கொள்ளாதவர் போல நாயக்கர் பேசாமல் நின்றார்.

"சரி, இந்த மடத்தைச் சோதனை போடுங்கள்" என்று பின்னால் நின்ற தன் போர்வீரர்களுக்கு உத்தரவிட்டு வெள்ளைக்காரன் புகைக்குழாயை எடுத்துப் பற்ற வைத்தான்.

உடனே, குதிரை மேலிருந்த இரண்டு சிப்பாய்கள் கீழே குதித்து உத்தரவுக்குப் பணிந்தனர். திவட்டி வெளிச்சத்தில் அவர்களில் ஒருவன் முகத்தைப் பார்த்தபோது நாயக்கருக்குப் 'பகீர்' என்றது.

ஓடிப்போன நல்லான் தான் அவன்! 'ஆகா! இப்பேர்ப்பட்ட துரோகிகள் இருக்கும் போது எதிரி ஏன் ஏற்றமடைய மாட்டான்' என்று நாயக்கர் எண்ணிக் கொண்டார்.

குதிரையிலிருந்து இறங்கிய இருவரும் ஒரு திவட்டியுடன் மடத்தை நோக்கி நடந்தார்கள். நாயக்கரும் கவிழ்ந்த தலையுடன் பின் தொடர்ந்தார். அடுத்த கணத்தில் நிகழப் போகிற காரியங்களை அவர் மனம் ஒரு கணம் எண்ணிப் பார்த்தது:—

'...இந்தத் துரோகிகள் இருவரும் கதவைத் திறக்கப் போகிறார்கள். அங்கே அவர் படுத்திருப்பதைக் காணப் போகிறார்கள். அவர் அயர்ந்த தூக்கத்திலிருக்கிறார். "இதோ பிடித்து விட்டோம் ஊமைத் துரையை" என்று கத்தப் போகிறார்கள். ஐயோ! படுகாயப் பட்டுக்கிடக்கும் அவரால் இப்போது என்ன செய்யமுடியும்! அந்த வெள்ளைக்காரன் துப்பாக்கி வேறு வைத்திருக்கிறான். இந்தப் போராபத்திலிருந்து அவரைத்

தப்புவிக்க ஏதாவது வழி உண்டா? இந்தத் துரோகி நல்லானைக் கட்டாரியால் தீர்த்து விட்டு, இன்னொருவனை உள்ளே புகவிடாமல் சமாளித்துக் கொண்டு "சாமி! வெளியேறித் தப்பித்துவிடுங்கள்" என்று கத்தலாமா? பலன் ஏற்படுமா? அந்தக் கண்கெட்ட கடவுள் இப்பேர்ப்பட்ட சுத்தவீரனை ஊமையும் செவிடுமாகப் படைத்து விட்டானே......'

நாயக்கர் கனவு காண்பதுபோல் இந்தப் பிரமையிலிருந்து விடுபடு முன், அந்த இருவரும் கதவைத் திறந்து உள்ளே சென்றுவிட்டார்கள். அவர் திடுக்கிட்டு, கட்டாரியை உருவிக்கொண்டு உள்ளே பாய்ந்தார்.

ஆனால், அதே கணத்தில் உள்ளே போன நல்லான் இவர் செய்கையை எதிர்பார்த்தவன் போல் திரும்பி நின்று, நாயக்கரின் கைகளைப் பலமாகப் பிடித்துக்கொண்டான். இன்னொருவன் அவரைப் பார்த்துச் செய்த சில அடையாளங்கள் அவரை மேலும் திகைக்க வைத்தன.

அவன் மெய்மறந்து நின்ற நாயக்கரின் காதோடு காதாக "நானும் நல்லானும் கும்பினிப் படையிலிருக்கும் நமது ஒற்றர்கள். நீங்கள் விடிவதற்குள் நம்ப எசமானரைக் கூட்டிக்கொண்டு போய் மலையடி வெளவால் தோப்பில் சேர்த்துவிடுங்கள். அங்கே நமது ஆட்கள் வந்து காத்திருப்பார்கள்" என்று சொன்னான்! நாயக்கருக்கு அதுவரை நின்றுபோயிருந்த மூச்சு ஒரு பெருமூச்சாக வெளிப்பட்டது.

"ஏய்! அங்கே என்ன செய்றீங்க?" என்று வெளியே நின்ற வெள்ளைக்காரன் கத்தினான்.

"இங்கே எல்லாம் பார்த்தாச்சு, துரையே! ஆளைக் காணோமே. நேரே சிவகிரிக் கோட்டைக்குப் போகவேண்டியது தான்" என்று சொல்லிக்கொண்டு இருவரும் வெளியே நடந்தார்கள்.

தீவட்டி வெளிச்சம் சாலையில் வெகுதூரம் போன பிறகு, நாயக்கர் உள்ளே வந்தார். நடந்ததை எதுவும் அறியாமல் ஆழ்ந்த தூக்கத்திலிருந்த ஊமைத்துரைக்கு மூன்றாம் ஜாமம் வரை காவல் இருந்தார். பிறகு அவரை எழுப்பிக்கொண்டுபோய் வெளவால் தோப்பிலிருந்த பாஞ்சாலங்குறிச்சி வீரர்களிடம் ஒப்புவித்துவிட்டுத் திரும்ப வந்து படுத்துக்கொண்டார்.

அதன் பின் காளையார்கோவில் காட்டில் நடந்த போரில் மருது பாண்டியன் படைகளுடன் சேர்ந்து, கும்பினியை எதிர்த்துப் போரிட்டுப் புலிக்குத்தி நாயக்கர் வீரமரணம் அடைந்தார்.

அந்த வணங்காமுடி வேந்தன் ஊமைத்துரைக்கு ஒரு நாள் இரவு புகலிடமாகவிருந்த இந்த மடத்துக்கு அதிலிருந்து 'ஊமையன் மடம்' என்று பெயர் ஏற்பட்டது!

Edited, Printed and Published by Murugu Subramanian for Ponni Ltd., at Ponni Achakam, 16, Seni Amman Koil Street, Tondiarpet, Madras-21